

## கப்ரால் மீதான பயணத்தடை விசாரணை முடியும்வரை நீடிப்பு

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 507 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (26.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 24 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும்

### விசேட மருத்துவர்களின் சங்கம்



ASSOCIATION OF MEDICAL SPECIAL

No. 6, SLMA Building, Wijerama Mawatha, Colombo 07.

Tel : 011 4506772 E-mail : ams.health@yahoo.com

ernando
MRCP, MRCPCH
iatrician

ETARY
eram
MRCS, FRCS,
opaedic Surgeon

TS
Gunasekara
eon
tha
eon

25th April 2022

Press Release

AMS stand on current crisis

The Association of Medical Specialists, at its Annual General Meeting held o 2022, unanimously passed a resolution on the current economic crisis and faced by Sri Lankan citizens.

The unanimously passed resolution urges both the current President a Minister of Sri Lanka to step down immediately following a due process an new interim administration to manage the current economic crisis faced by citizens.

This resolution is based on many representations made by AMS member hardships the citizens of Sri Lanka are facing currently.

Thank you.

நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக பதவிகளில் இருந்து விலக வேண்டும் என விசேட மருத்துவர்களின் சங்கம் ஏகமனதாக தீர்மானத்தை எடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக விசேட மருத்துவர்களின் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகிய பின்னர், இலங்கை பொதுமக்கள் எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய புதிய இடைக்கால அரசாங்கம் நியமிக்கப்பட வேண்டும் எனவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

# அரசு, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை!

## பிரேரணைகள் 03ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு

அரசாங்கத்தின் மீதும் சபாநாயகர் மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டு வருவதற்கு அரசியல் கட்சிகள் பல ஒன்றுகூடி தீர்மானித்துள்ளன.

கொழும்பில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் இல்லமொன்றில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மே மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூட முன்னர் அதற்கு முதல் நாள் சபாநாயகரை சந்தித்து அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்றபின் அன்றைய தினம் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற பின்னர் இடைக்கால அரசாங்கமொன்றை 17முதல் - 22 வரையான அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவைக்குள் வரையறுத்து ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த இடைக்கால அரசுக்கு ஆலோசனைகளை வழங்க விசேட ஆலோசனைச் சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியில் இருப்பதால் இதனை வெல்லமுடியுமென நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இதற்கிடையில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

## ஈஸ்ரர் தின தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் விளக்கம் தேவை

### பாப்பரசர் வலியுறுத்து



02 பக்கம்

## இடைக்கால அரசை அமைப்பதில் பல அரசியல் கட்சிகள் உடன்பாடு!

### சஜித் - விமல் அணிகள் நேற்றைய சந்திப்பில் புதிய திருப்பம்



•நா.தினுஷா

இடைக்கால அரசாங்கமொன்றை அமைத்து நாட்டின் அவசரமான, முக்கியத்துவமிக்க பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபூண்டுள்ளதையடுத்து, இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் கொழும்பில் நேற்று முக்கிய பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. 02 பக்கம்

## பஸ்களுக்கான உதிரிப்பாகங்கள் இல்லை

பஸ்களுக்கு தேவையான வாகன உதிரிப்பாகங்கள் இன்மையினால் பஸ் போக்குவரத்தை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களின் விலை நூற்றுக்கு நூறு வீதம் அதிகரித்துள்ளதுடன் ரயர், பெட்டரி, பெக் லைனர் உள்ளிட்ட பஸ்களுக்கான உதிரிப்பாகங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் பாரியளவான தனியார் பஸ்கள் போக்குவரத்து நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 02 பக்கம்

## 7,200 மெட்ரிக் தொன் எரிவாயு இந்த வாரத்திற்குள் வந்தடையும்

02 பக்கம்

## நெருக்கடியை தீர்க்க இடைக்கால அரசு ஏற்பாடு;

### நாடாளுமன்றம் ஊடாக அரசியலமைப்பில் திருத்தம்!

### மகாநாயக்க தேரர்களுக்கு அறிவித்தார் ஜனாதிபதி கோட்டா

•யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மகாநாயக்க தேரர்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதுடன், இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்தான இணக்கப்பாட்டையும் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக மகா சங்க சபையின் செயலாளரும்... 02 பக்கம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தை உடனடியாக கூட்டுங்கள்!

### சபாநாயகரிடம் சஜித் கோரிக்கை

•யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள சவால்மிக்க நிலைமைக்கு அரசியலமைப்பு நேரடியாக தலையிட வேண்டியது அவசியமானது.

எனவே, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 21ஆவது திருத் தத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள 21ஆவது திருத்தம் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள சவாலான நிலைமைக்கு... 02 பக்கம்

## பதவி விலக ஆட்சியாளர்களுக்கு ஒருவார காலக்கெடு தருகிறோம்

### 120 எம்.பிக்கள் அரசுக்கு எதிர் என்கிறார் கம்மன்பில



•யோ.தர்மராஜ்

பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகின்றது. ஒருவேளை, அரசாங்கமும் பிரதமரும் பதவி விலகாவிட்டால் இவ்வாரத்திற்குள் அரசுக்கு... 02 பக்கம்

## சவப்பெட்டி தயாரிப்பில் வீழ்ச்சி



### மலர்ச்சாலை உரிமையாளர்கள் கவலை

சவப்பெட்டி தயாரிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக மலர்ச்சாலை உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை கேன்களுக்கு பெற்றுக் கொடுக்காமையினால், மரம் வெட்டும் இயந்திரங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முடியாமல் போயுள்ளதாக மலர்ச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இதன் காரணமாக சவப்பெட்டி தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் மரப் பலகைகளின் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் சவப்பெட்டி தயாரிப்பு சிக்கல் நிலையை சந்தித்துள்ளது. அதேபோன்று, மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக மரத்தளபாட தொழிற்சாலைகளில் அதிக விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும் பலகைகளினூடாக தயாரிக்கப்படும் சவப்பெட்டிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## இரண்டாவது முறையாகவும் பிரான்ஸ் ஜனாதிபதியாக மெக்ரொன் தெரிவு

11 பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஆகியோரை கைதுசெய்வது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயத்தை கேட்டிருக்கிறதாம் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு.

இப்படியான கைது எதுவும் இடம்பெற்றால் இப்போதைய நிலையில் அது அரசுக்கு மேலும் நெருக்கடியை கொடுக்கலாமென பலரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## அரசியலமைப்பு மறுசீரமைப்பு யோசனைகள் ஜனாதிபதிக்கு



அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முடிவுசெய்யும் நோக்கில், அரசாங்கம் அந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை ஆழமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக அர்ப்பணிப்புடன் மதிப்பான பணியை நிறைவேற்றிய குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் காமினி செனரத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை பதவி விலகக்கோரி

### கண்டியிலிருந்து கொழும்புக்கு பேரணி

### ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பம்

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதியை பதவி விலகக்கோரி ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்துள்ள பாத யாத்திரை பேரணியானது இன்று கண்டியிலிருந்து ஆரம்பமாகவுள்ளதுடன், மே முதலாம் திகதி இப்பேரணி கொழும்பை வந்தடையவுள்ளது. 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



இந்தளவு நெருக்கடிக்குள்ளயும் போன கிழம அமைச்சு, இராஜாங்க அமைச்சு எடுத்த ஆக்கள் நிலைய யோசிச்சு பார்த்தன்... எதிரிக்கு கூட அந்த நிலைமை வரக்கூடாதுங்கோ...

## 7,200 மெட்ரிக் தொன்...

7,200 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய இரு கப்பல்கள் இந்த வாரத்திற்குள் நாட்டை வந்தடையும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று 3,600 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

இன்று கொண்டுவரப்படும் எரிவாயு தொகையை நாளை (27) முதல் சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் 3,600 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாளை (27) நாட்டை வந்தடையவுள்ளது.

இதேவேளை, குறைந்த விலையில் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதன் காரணத்தினால் நாளாந்தம் தமக்கு சுமார் 25 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கப்ரால் மீதான பயணத்தடை...

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த பயணத் தடையை கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று நீடித்துள்ளதுடன், இந்தத் தடையானது வழக்கு விசாரணை முடியும் வரை அமுலில் இருக்கும் என அறிவித்துள்ளது.

மேலும், ஜூன் 7ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு கப்ராலுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதுடன், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

## நெருக்கடியை தீர்க்க...

அஸ்கிரிய பீடத்தின் பதிவாளருமான மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திற்கு பதிலளித்து அனுப்பியுள்ள கடிதம் குறித்து நேற்று (25) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு எவ்வாறு தீர்மானங்கள், நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்திடம் மகாநாயக்க தேரர்கள் இணைந்து கடிதம் மூலம் பல முறை தெளிவுப்படுத்தியிருந்தோம்.

இந்த கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ, அவருடைய பதிலை கடிதம் ஒன்றின் ஊடாக மகாநாயக்க தேரர்களுக்கு அறிவித்துள்ளார்.

அதன்படி, மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியதன்படி, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை தீர்த்து மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் குறித்தும் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்தோடு, இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்தும் தன்னுடைய இணக்கப்பாட்டையும் தெரிவித்துள்ளார். அத்தோடு, அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக, நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

மேலும், ஏதேனும் தகவல்கள் மற்றும் கருத்துகள் இருப்பின் அதனையும் மகாநாயக்க தேரர்களிடம் அறிவிப்பதாகவும் அவர் குறித்த கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார் - என்றார்.

இதேவேளை, இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடுவது போன்று, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடிகள் அனைத்திற்கும் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். அதனை நிவர்த்தி செய்வதற்கு குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து அரசாங்கம் சில நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. அதன் பிரதிபலனை பெற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு சிறிது காலத்தை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். உங்களுடைய கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் எதிர்காலத்திலும் அவசியம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனைத்து கட்சிகளும் இணைந்துக் கொண்டு தற்போதுள்ள அரசியல் நெருக்கடியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்வந்து ஏதேனும் யோசனைகளை முன்வைத்தால் அதனை ஏற்றுக்கொண்டு அதற்கு முழு பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றேன் என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை பதவி விலகக்கோரி...

அதன்படி, இன்று 26ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பாத யாத்திரையானது முதல் நாள் கண்டியில் இருந்து மாவனல்லை வரையும் இரண்டாவது நாளான 27ஆம் திகதி மாவனல்லையில் இருந்து கலிகமுவ வரையும் மூன்றாவது நாளான 28ஆம் திகதி கலிகமுவ முதல் தங்கோவிட்ட வரையும் நாளாவது நாளான 29ஆம் திகதி தங்கோவிட்டவிலிருந்து யக்கல வரையும் ஐந்தாம் நாளான 30ஆம் திகதி யக்கலயிலிருந்து பேலியகொட வரையும் பயணித்து கொழும்பை வந்தடையவுள்ளது.

இப் பாத யாத்திரை குறித்து நேற்று (25) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ,

ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றுவதற்கான வீதி ஆர்ப்பாட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி நாளை முதல் (இன்று 26) ஆரம்பிக்கின்றது. ஜனாதிபதி பதவிவிலக வேண்டும் என்பதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளது. இலங்கையின் சரித்திரத்தில் இல்லாத மிகப் பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியே கண்டியில் ஆரம்பமாகும்.

தலதா மாளிகையில் வழிபாடு செய்த பின்னர் நாங்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பிப்போம். மே முதலாம் திகதி கொழும்பை வந்தடைவோம். அதன் பின்னர் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும். அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டாலும் சிறையில் அடைக்கப்பட்டாலும் நாங்கள் ஆர்ப்பாட்டங்களை தொடர்வோம்.

எனவே, நாட்டிலுள்ள அனைத்து மக்களும் வெள்ளை அல்லது கறுப்பு உடையில் இப் பேரணியில் பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## ஈஸ்ரர் தின தாக்குதல்...

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு யார் காரணம் என்பதை இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது நாட்டிற்கு அமைதியையும் மனச்சாட்சியையும் கொண்டுவரும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆராதனையின்போது பரிசுத்த பாப்பரசர் இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையிலிருந்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 60 பேர் கொண்ட குழுவினர் அண்மையில் பாப்பரசரின் சிறப்பு அழைப்பை ஏற்று வத்திக்கான் நோக்கி பயணமாகியிருந்தனர். இவர்களில் ஏப்ரல் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உட்பட சுமார் 30 பேர் வரையில் உள்ளடங்கியிருந்தனர். இலங்கையிலிருந்து சென்ற பேராயர் தலைமையிலான குறித்த குழுவினர் நேற்றைய சிறப்பு ஆராதனைகளில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வத்திக்கானில் நேற்று இடம்பெற்ற விசேட ஆராதனையின்போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தயவுசெய்து நீதிக்காக, உங்களின் மக்களிற்காக இந்த சம்பவங்களிற்கு யார் காரணம் என்பதை நிச்சயமாக தெளிவுபடுத்துங்கள் என பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து வத்திக்கான் நகரில் உள்ள புனித பீட்டர்ஸ் பெஸிலிக்கா தேவாலயத்தில் சிறப்பு ஆராதனையும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் நேற்று இடம்பெற்றது.

## கட்சித் தலைவர்கள்...

அரசியலமைப்பானது நேரடியாக தலையிட வேண்டியது அவசியம் என நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தில் எடுக்கும் முடிவுகள் குறித்து முழு நாட்டு மக்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் கோரும் பிரதான மறுசீரமைப்புக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது முக்கியமானது. அத்துடன், நாட்டினுள் சிறந்த ஆட்சி மற்றும் வெளிப்படையான தீர்மானங்கள் தொடர்பாக அரசியலமைப்பு மாற்றம் அத்தியாவசியமானதாகும்.

எனவே, அதற்காக தற்போது உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன், இக் கூட்டத்திற்கு சட்டமா அதிபர், அத் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் சட்டவரைபு திணைக்களத்தின் அதிகாரிகளையும் அழைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த நடவடிக்கைகளை மேலும் காலம் தாழ்த்துவதற்கோ அல்லது பேச்சுவார்த்தை நடத்தி கொண்டிருப்பதற்கான காலம் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மாநாயக்க தேரர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தொழில்முனைவோர்களான புதிய தலைமுறை இளைஞர், யுவதிகள் என முழு நாட்டு மக்களும் நாட்டுக்காக உடனடியாக எடுக்க வேண்டிய தீர்வுகள் தொடர்பாக நாடாளுமன்றம் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றனர். எனவே, தற்போது நீங்கள் எடுக்கும் தீர்மானங்களே எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகிறோம். இந்த கோரிக்கைக்கு விரைவில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இடைக்கால அரசை...

இதில் ஓர் அம்சமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளும் விமல் அணியின் பிரதிநிதிகளும் நேற்று நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரஞ்சித் மத்தும பண்டார, எஸ்.எம். மரிக்கார், டொக்டர் ராஜித சேனாரத்ன, டொக்டர் ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, கயந்த கருணாதிலக ஆகியோர் கலந்துகொண்டனர்.

விமல் வீரவங்ச மற்றும் அரசின் சுயாதீனக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் குழுவினர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இடைக்கால அரசாங்கம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் சில தினங்களில் மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசாங்கத்தினை குறுகிய காலத்திற்கு வரையறுப்பது, அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20ஆக குறைப்பது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகளை கண்டவுடன் உரிய தேர்தல்களை நடத்துதல், அரசியலமைப்பில் திருத்தங்களை செய்தல் போன்ற விடயங்களை செய்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டு கொள்கையளவில் சில இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பெரும்பான்மை

இதேவேளை, அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்வதற்கு தேவையான பெரும்பான்மை கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகி தற்போது சுயேச்சை எம்.பி.க்களாக உள்ள 41 பேரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஏனைய எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, பிரேரணை சமர்ப்பிக்கப்படும் விதம், கையளிக்கப்பட்டதன் பின்னர் ஏற்படும் நிலைமை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தொடர்ந்து பேசப்படுமென தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க பல அரசியல் கட்சிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பதவி விலக ஆட்சியாளர்களுக்கு...

எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்தோடு, பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் பதவி விலகி இடைக்கால அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நேற்று (25) பிவித்துரு ஹெல உறுமயவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியால் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், 113 பெரும்பான்மை இல்லாத அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமாக இருந்தால் அது, அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதற்கு பதிலாக, அரசாங்கத்திற்கு ஆதரவு இருக்கின்ற யோசனையாக மாறிவிடும் என்பதோடு, 113 பெரும்பான்மையை இணைக்கும் வரை பொறுமையாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டோம்.

அதற்கமைய, இன்று அரசாங்கத்திற்கு எதிராக 113 அல்ல 120 பெரும்பான்மை கிடைத்துள்ளது. எதிர்க்கட்சிக்கு 65 ஆசனங்கள் இருந்ததுடன், எங்களுடைய 42 பேரும் எதிர்க்கட்சிக்கு வந்தோம். எனினும், அதில் மூவர் மீண்டும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டதால் எங்களுடைய 39 பேரையும் 65 பேருடன் இணைத்துக்கொண்டதால் 104 ஆசனங்கள் இருக்கின்றன.

மேலும், இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியிலுள்ள 10 பேர் பகிரங்கமாக அறிவித்தனர். அதன்படி, 104 ஆசனங்களுடன் 10 பேரையும் இணைத்துக்கொண்டதால் 114 ஆசனங்கள் இருக்கின்றன.

அதேபோன்று, 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்த 3 முஸ்லிம் உறுப்பினர்கள், தற்போது அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை மீளப் பெற்றுக்கொண்டு தங்களுடைய கட்சிகளுடன் இணைந்துகொண்டனர். அதன்படி, 114 உடன் 3 ஆசனங்களை கூட்டும் போது தற்போது 117 ஆசனங்கள் இருக்கின்றன.

இதேவேளை, அமைச்சர் நாலககொடஹேவா, முன்னாள் அமைச்சர் டளஸ் அலகபெரும மற்றும் கோப்குழுத் தலைவர் சரித ஹேரத் ஆகியோரும் இடைக்கால அரசாங்கத்திற்கு வழிவிட்டு, தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என அறிவித்துள்ளனர். அதன்படி, அவர்கள் மூவரையும் இணைக்கும் போது தற்போது 120 ஆசனங்கள் இருக்கின்றன. அவ்வாறாயின் இந்த 120 பேரும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

அதேபோன்று, தற்போது தங்களுடைய நிலைப்பாட்டை அறிவிக்காது, நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கும் போது அதற்கு ஆதரவளிப்பதற்கு ஆளுந்தரப்பில் பல உறுப்பினர்கள் தயாராக இருக்கின்றனர் என்பதையும் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன்.

மேலும், அரசாங்கத்திற்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வரைபை தயாரித்து, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன், அவர்களும் தங்களுடைய இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளனர். பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகின்றது. ஒருவேளை, அரசாங்கம் பதவி விலகாவிட்டால் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இவ்வாரத்திற்குள் கையளிப்போம் - என்றார்.

## பஸ்களுக்கான...

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரண பஸ் கட்டணம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து கட்டணம் அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக சிசுசெரிய போக்குவரத்து வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

சிசுசெரிய போக்குவரத்துச் சேவையினூடாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் தற்போது அறவிடப்படும் பஸ் கட்டணத் தொகையிலிருந்து அரை பங்கை மாத்திரம் அறவிடமுடியும். தற்போதுள்ள நிலைமையில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கமாகும்.

இதுதொடர்பில் எம்மால் தனியாக தீர்மானங்களை எடுக்க முடியாது. மாணவர்களுக்கு நிவாரணம் வழங்க முடியும். சிசுசெரிய சேவையை பயன்படுத்தாத மாணவர்களுக்கு மேலும் நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய பயணஅட்டை நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் அந்த நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த விலை அதிகரிப்பை பயணிகளால் நிச்சயமாக தாங்கிக்கொள்ள முடியாது. எங்களாலும் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எங்களின் செலவுகள் நினைத்து பார்க்க முடியாதளவுக்கு அதிகரித்துள்ளன. இதற்கு முன்னர் 25 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பெட்டரி தற்போது 52 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஆகவே, நூற்றுக்கு நூறு வீதம் பெட்டரியின் விலை அதிகரித்துள்ளது. டயர் விலை மேலும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பெருமளவு பஸ்கள் சேவையிலிருந்து நீங்கியுள்ளன.

இதனை எவராலும் நிர்வகிக்க முடியாது. தற்போது ஏற்பட்டுள்ள பணவீக்கத்தினால், மக்களால் தங்கிக்கொள்ள முடியாதளவுக்கு பஸ் கட்டணம் அதிகரித்துள்ளது. அதுமாத்திரமல்லாமல், எங்களுக்கான வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாத செலவு வீதத்தை ஈடுசெய்ய முடியாத பஸ் கட்டணமே தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

செலவுகள் அதிகரித்துள்ளதால் செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே பஸ் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனால், எதிர்வரும் காலத்தில் முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படும். தற்போதுள்ள நிலைமையில் அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு எங்களுக்கு இல்லை. எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட நேரத்தில் கூட போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டதே தவிர, எச்சரிக்கை நிலையில் உள்ளோம் என தெரிவித்து நாங்கள் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் முன்னெடுக்கவில்லை.

கொரோனா நிலைமை காரணமாக ஒன்றரை வருடம் பஸ் போக்குவரத்து சேவை பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. தனியார் பஸ் உரிமையாளர்கள், பணியாளர்கள் என சகலரும் நெருக்கடிக்குள்ளாகியிருந்தனர்.

இருந்தபோதிலும், தற்போது தலைதூக்க முடியாதளவுக்கு சிக்கலை சந்தித்துள்ளோம். மக்களை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவதில் எங்களுக்கு விருப்பமில்லை. மகாசங்கத்தினின் யோசனைக்கமைய அரசாங்கம் செயற்படாவிட்டாலும் விரும்பாவிட்டாலும் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டி ஏற்படும் என்பதை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கிடைக்காவிட்டால் அடுத்த வாரம் முதல் சகல தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடாது என்றார்.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு வரலாற்றுக் காரணங்களும் இருக்கின்றன

## ஒரே இரவில் பிரச்சினையை தீர்க்க முடியாதென்கிறார் சீனத் தூதுவர்



(நா. தினுஷா)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு வரலாற்றுக் காரணங்களும் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினையை ஒரே இரவில் தீர்த்துவிட முடியாது - என சீனத் தூதுவர் ஷி செங்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீன தூதுவர் ஷி செங்ஹொங் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று (25) கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி, பொருளாதார ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, மக்களுக்கிடையிலான பரிமாற்றம் என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அங்கு கருத்து தெரிவித்துள்ள சீனத் தூதுவர்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள அரசாங்கத் தரப்பு, சமூக குழுக்கள், நிறுவனங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட சகல தரப்பினரதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள சீனா முயற்சித்து வருகின்றது.

இலங்கை வரலாற்றில் காலனித்துவத்தை ஏற்படுத்தி மேற்குலகத்தைச் சேர்ந்த அபிவிருத்தியடைந்த நாடுகளும் உதவ வேண்டும்.

கடந்த இரு வருடங்களில் 26 மில்லியன் தடுப்பூசிகள், மருத்துவ உபகரணங்கள், 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி, இலங்கையர்களுக்கான 11 ஆயிரம் வேலைவாய்ப்பு என்பவற்றை இலங்கைக்கு சீனா ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சீனா மற்றும் இலங்கை நிதி நிறுவனங்களும் புதிய நிதி கடன் உதவி உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பில் தெளிவாக ஆராய்ந்து வருகின்றன. மேலும், சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களின் பின்னணியில் இலங்கையின் கடன் மீள் செலுத்துகையும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு வரலாற்றுக் காரணங்களும் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினையை ஒரே இரவில் தீர்த்துவிட முடியாது.

சீனா மாத்திரம் இலங்கைக்கு கடன் வழங்கவில்லை. ஆனால், இலங்கைக்கு பாரியளவான கடன் தொகை மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள அநேகமான கடன் தொகை நாட்டின் உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேம்பாட்டுக்கான பயன்படுத்தப்படுகின்றது.


இலங்கை மற்றும் இலங்கை மக்களின் பொருளாதார, சமூக நன்மைகள் பயக்கும் வகையிலான நூற்றுக்கும் அதிகமான கூட்டுத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம், வடிகாலமைப்பு வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை நீக்குவதற்காக 2021ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து கடந்த ஜனவரி மாதம் வரையில் சீனாவினால் இலங்கைக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம்முதல் கடந்த ஜனவரி மாதம்வரை இலங்கை சீனாவிடமிருந்து 7 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை பெற்றுக்கொண்டுள்ளது. இருந்தபோதிலும் அந்தத் தொகையில் இதுவரையில் 7 வீதமான தொகைக்கு மாத்திரமே நிதி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், 12 சதவீத தொகைக்கு நிதி செலுத்தவேண்டியுள்ளது. அதற்கமைய, சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட எரிபொருளுக்கு 390 மில்லியன் டொலர் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

# வீதியை விட்டு நீர்நிலையில் வீழ்ந்த முச்சக்கரவண்டி



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு, பெரியபோரதீவு பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை (25) இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் எரிபொருள் நிரப்புவதற்காக அதனைச் செலுத்திச் சென்றவரே இதன்போது காயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அருகிலிருந்த நீர்நிலை யில் வீழ்ந்துள்ளது. இதில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# நெருக்கடியிலிருந்து மீள்வது குறித்து எம்.பிக்களுக்கு விசேட நிகழ்ச்சி

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பது என்ற தொனிப்பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிகழ்வை நாளை (27) நாடாளுமன்றத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நாடாளுமன்றக் குழு அறை இலக்கம் 01இல் இந்த விசேட நிகழ்வு நடைபெறவுள்ளதுடன், இதனை நாடாளுமன்ற அரசாங்க நிதி பற்றிய குழு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதான வளவாளராக கலாநிதி ஸ்வர்னிம் வாக்லே கலந்துகொள்ளவுள்ளார். இவர் தற்பொழுது பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மூலோபாய விசேட நிபுணராக 36 நாடுகளுடன் பணியாற்றி வருகிறார். மேலும் உலக வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்த விசேட நிகழ்வில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அரசாங்க நிதி பற்றிய குழு அழைப்பு விடுத்துள்ளது.

# அரசியலமைப்புக்கு முரணாக என்னால் செயற்படமுடியாது

## எதிர்க்கட்சித் தலைவருக்கு சபாநாயகர் பதில்

(நா. தினுஷா)

உத்தேச 21ஆவது திருத்தம் தொடர்பில் தனது கடமைகளுக்கமைய அரசியலமைப்புக்கப்பால் அல்லது அரசியலமைப்பு முரணாக தன்னால் செயற்பட முடியாது - என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முன்னோக்கி கொண்டுசெல்வதற்காக உடனடியாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவரினால் சபாநாயகரிடம் முன்வைக்கப்பட்ட எழுத்துபூர்வமான கோரிக்கைக்கு பதிலளித்து அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அந்த பதில் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உங்களின் கடிதம் கிடைக்கப்பெற்றது. மக்களால் கோரப்பட்டுள்ள அரசியலமைப்பு மறுசீரமைப்பை நோக்காகக்கொண்டு உங்களின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட 40 எம்.பிக்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க கடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடியதன்படி அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட 21ஆவது அரசியலமைப்புத் திருத்த யோசனையை அன்றே அதனை பிரதமர், அமைச்சரவையின் செயலாளர், சட்ட மா அதிபர் ஆகியோரிடம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்துவிட்டேன். அதற்கயை, அந்த யோசனை இன்று (நேற்று) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக அறிகிறேன்.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி அதனை சட்ட மா அதிபரிடம் கையளிக்க வேண்டியது அமைச்சரவை செயலாளரின் சட்டரீதியான பொறுப்பாகும். இந்த நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டின் இன்றுள்ள சட்ட திட்டங்களுக்கமைய விரைந்து செயற்பட வேண்டியதே அவசியம் என்பதை கவனத்தில் கொண்டுவர விரும்புகிறேன். இதனை தனிநபர் யோசனையாக நாடாளுமன்றத்தில் முன்வைப்பது, அதுதொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதும் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இது தேசிய ரீதியில் முக்கியம் வாய்ந்த உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டிய விடயமென்றாலும், அரசியலமைப்பை பாதுகாப்பதற்காக ஏற்றுக்கொண்ட கடமைகளை என்னால் ஒருபோதும் அரசியலமைப்புக்கப்பால் அல்லது அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட முடியாது.

எது எவ்வாறாயினும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாளை மறுதினம் (28) நடத்த தீர்மானித்துள்ளேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானங்களை குத்தகைக்கு எடுப்பதற்கான கொள்முதல் செயன்முறையை மூன்று மாதங்கள் ஒத்திவையுங்கள்

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு கோப் குழு பரிந்துரை











ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் 2022-2025 காலப்பகுதியில் 21 விமானங்களை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வது தொடர்பான கொள்முதல் செயற்பாட்டை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் நேற்று (25) பரிந்துரைத்தார்.

இதற்கமைய தற்பொழுது காணப்படும் பொருளாதார நிலைமையின் கீழ் முழுமையான செயற்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறும், உரிய கொள்முதல் செயல்முறை உரிய நடைமுறைகளுக்கு இணங்குகிறதா என்பது பற்றி ஆராயுமாறும் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். கொள்முதல் வழிகாட்டலை உரிய முறையில் தயாரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட கொள்முதல் செயன்முறையை அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதனை அமைச்சரவை முடிவாக இதனை முன்னெடுக்குமாறும் கோப் தலைவர் இங்கு பரிந்துரைத்தார்.

விமானங்களின் சேவைக்காலம் முடிவடைந்ததும் அவற்றுக்காக விமானங்களை மாற்றீடு செய்தல் விமான சேவையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அவசியமான நடைமுறை என்பதை ஏற்றுக்கொள்ள முடியும். இருந்தபோதும் நாட்டின் நெருக்கடி நிலைமை காணப்படுவதால் இது குறித்து அதிக கவனம் செலுத்தி உரிய தேவைகளைப் பூர்த்திசெய்வது முக்கியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு விமானங்களை குத்தகைக்கு எடுப்பது தொடர்பில் ஏற்பட்ட கருத்தாடலைத் தொடர்ந்து இதுபற்றி ஆராய்வற்கு இந்நிறுவனம் நேற்று (25) கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் விமான சேவையில் தற்பொழுது காணப்படும் 24 விமானங்களின் எண்ணிக்கை சில காலங்களில் குறைவடையும் என்றும், விமானங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாது. இதற்கு சிறிதுகாலம் எடுக்கும் என்பதால் அதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்து விளம்பரத்தைப் பிரசுரித்திருந்ததாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் அசோக பத்திரகே மற்றும் அதன் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கமைய சந்தை நிலைவரங்களை கருத்திற்கொண்டு, இந்த செயல்முறை 6-12 மாதங்களுக்கு இடையில் எடுக்கும். மேலும் இந்த நடவடிக்கைகள் அமைச்சின் ஊடாக மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும் என்று பத்திரகே கூறினார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை மேம்படுத் துவதற்கு நாட்டின் நிர்வாகத்தில் உயர் அனுபவம் கொண்ட நிபுணர்கள் குழுவின் முயற்சிகளை கோப் குழு உறுப்பினர்கள் பாராட்டினர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாரியளவில் பணியாளர்களின் கொடுப்பனவைக் குறைத்திருப்பதாக சுட்டிக்காட்டிய விமான சேவையின் தலைவர், நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு ஆற்றிய பங்களிப்பையும் தெரிவித்தார். நேற்றைய கூட்டத்தில் அமைச்சர் நாலக கொடஹேவா, இராஜாங்க அமைச்சர்களான டி.வி.சானக்க, இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த அமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, எஸ்.எம்.மரிக்கார், மதுர விதானகே, பிரேம்நாத் சி தொலவத்த, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் அசோக் பத்திரகே மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கல்கிஸையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கல்கிஸை டெம்பிள்ஸ் வீதியில் உள்ள குறுக்கு வீதியில் கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக நம்பப்படும் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 28 வயதுடைய பட்டோவிட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தெஹிவளை நெடிமால பிரதேசத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் சாரதியாக கடமையாற்றியவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்றுமாலை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், கல்கிசை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழானது

**LOLC ஹோல்டிங்ஸ் பீஎல்சீ உடன் புரஸ்பெயார் ரியலிடி (பிரைவட்) லிமிட்டடின் ஒன்றிணைத்தலை நிறைவுசெய்தல் பற்றிய அறிவித்தல்.**

மேற்குறித்த விடயம் தொடர்பில் கொழும்பில் சுற்றோட்டத்திற்கு விடப்படுகின்ற “தினசரி மௌபிம”, “தினசரி வீரகேசரி” மற்றும் “டெய்லி சிலோன் டுடே” செய்திப் பத்திரிகைகளில் 2021 நவம்பர் 15 ஆம் நாளன்றும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 2021 நவம்பர் 26 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட புரஸ்பெயார் ரியலிடி (பிரைவட்) லிமிட்டட் - PB 3854 PV என்ற நிறுவனத்தை LOLC ஹோல்டிங்ஸ் பீஎல்சீ – PQ 70 நிறுவனத்துடன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைத்தலை பற்றிய முன்னைய அறிவித்தலுக்கு மேலதிகமாக, ஒன்றிணைத்தல் நிறைவுபெற்றுள்ளது என்றும், ஒன்றிணைத்தல் நடைமுறைக்கு வரும் திகதியானது கம்பனிகள் சட்டத்தின் பகுதி VIII இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் கீழ் 2022 மார்ச் 12ஆம் திகதியாகவிருக்கும் என்றும் நாம் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம்.

அதற்கமைய, 2022 மார்ச் 12 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புரஸ்பெயார் ரியலிடி (பிரைவட்) லிமிட்டட் செயற்பாட்டில் இல்லை என்பதுடன் அதன் தொடர்திருக்கும் கம்பனி LOLC பீஎல்சீ ஆகும்.

LOLC ஹோல்டிங்ஸ் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
LOLC கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி செயலாளர்கள்
2022 ஏப்ரல் 15 ஆம் திகதி

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 26ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தணியாது ராஜபக்ஷக்கள் மீதான மக்களின் கோபம்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி, காலிமுகத்திடல் போராட்டம் நேற்று 17 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. அத்துடன், நாடு முழுவதும் மேலும் பல போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வாசஸ்தலத்தை முற்றுகையிட்டது.

போராட்டத்தை முடக்குவதற்காக நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொண்ட பொலிஸார் பல்வேறு இடங்களில் வீதித்தடைகளை அமைத்திருந்தனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காலிமுகத்திடல் நோக்கி பேரணியை ஆரம்பித்தனர். எனினும், வீதித்தடை அமைக்கப்பட்டிருந்த காரணத்தினால் பேரணி, பிரதமரின் இல்லம் நோக்கித் திசைதிருப்பப்பட்டது.

பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள், அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், மதில்மேல் ஏறியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அதன் பின்னர் அங்கிருந்து பேரணியாக காலிமுகத்திடல் நோக்கிச் சென்றனர்.

"முழு நாட்டு மக்களும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் போராடுகின்றனர். அவர்களைப் பதவி விலகுமாறு கோருகின்றனர். எனினும், அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வெட்கமின்றி பதவிகளை விட்டுக்கொடுக்காமல் இருக்கின்றனர். இனியாவது அவர்கள் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்க வேண்டும். எங்களுக்கு எதிராக வீதித் தடைகளை அமைக்கிறார்கள். அவற்றை தகர்த்தெறிவது எமக்குப் பெரிய விடயமல்ல.

இந்தப் போராட்டத்தின் மூலம் மக்களின் எதிர்பார்ப்பை நாம் சொல்ல வந்தோம். செவிமடுக்காத பட்சத்தில் அடுத்த எல்லைக்குச் செல்வதற்கும் நாம் தயங்க மாட்டோம். இந்த நாட்டின் இளைஞர்கள் நாங்கள். எங்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் வாழ்வதற்கு நாடு வேண்டும். இந்த ஆட்சி இன்னும் நீடித்தால் நாட்டில் ஒரு துண்டு நிலம் கூட நமக்குச் சொந்தமாக இருக்காது" என போராட்டக்காரர்கள் தரப்பில் மிக அழுத்தமாகச் சொல்லப்பட்டது.

இதேவேளை, காலிமுகத்திடலில் பல்வேறு தரப்பினர் இணைந்து தொடர்ச்சியாகப் போராடிவருகிறார்கள். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்த போதிலும், அதற்கு போராட்டக்காரர்கள் இணங்க மறுத்துவிட்டனர்.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிக வலுவானதாக காலிமுகத்திடல் போராட்டம் மாறியிருக்கிறது. அதற்கு ஆதரவளிக்கும் வகையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் நேற்றுப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். சமூக செயற்பாட்டாளர்கள், விளையாட்டு வீரர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பல்துறை சார்ந்தோர் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்துள்ளார்கள். தினமும் ஆயிரக்கணக்கானோர் இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு வலியுறுத்திவருகிறார்கள்.

நாட்டில் எரிபொருள், எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் இல்லை. மருந்துப் பொருட்களும் கிடையாது. அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதற்கெல்லாம் நடப்பு அரசாங்கமல்லவா பொறுப்புக் கூற வேண்டும்.

இத்தனை பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் நாட்டு மக்கள் தங்கள் உரிமைக்காக போராடுவதில் தவறில்லையல்லவா? இவ்வாறான போராட்டங்களை முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் மக்களின் ஆவேசம் மேலும் அதிகரிக்கும் என்பதை வரலாறு சொல்லியிருக்கிறது.

தங்கள் பணிகளைத் தவிர்த்து போராடுபவர்களுக்கு அரசாங்கம் பதில் வழங்க வேண்டும் அல்லது செவிசாய்க்க வேண்டும். அதனைத் தவிர்த்து அமைதியாக இருப்பதனாலோ, போராட்டத்தை முடக்குவதற்கான வழிவகைகளைத் தேடுவதனாலோ களம் அமைதியாகி விடப்போவதில்லை.

நீண்ட கால திட்டமிடல்கள், முறையான நிதி முகாமைத்துவம் இல்லாத காரணத்தினால் நாட்டு மக்கள் அல்லல் படுகிறார்கள். சுபீட்சமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மோசமான பொருளாதாரச் சுமைக்கு தள்ளியிருக்கிறது. இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்று மக்களின் கோரிக்கைக்கு உரிய பதிலை வழங்குவது அவசியமாகும். இல்லாவிடின் மேலும் மேலும் போராட்டங்கள் வலுப்பெற்று தீவிரமடையுமே தவிர ராஜபக்ஷக்கள் மீதான கோபமும், விரக்தியும் குறையப்போவதில்லை.

# தந்தை செல்வா கேட்ட சமஷ்டித் தீர்வை வழங்கியிருந்தால் இலங்கைக்கு இன்று வங்குரோத்து நிலை ஏற்பட்டிருக்காது!





இன்றைக்கு தந்தை செல்வாவின் நினைவுநாள். தந்தை செல்வா காலமாகி 45 வருடங்கள் ஆகிவிட்டன. 1977 ஏப்ரல் 26 அன்று தந்தை செல்வா காலமானார்.

ஆனால், இப்போதுள்ள காலம் தந்தை செல்வாவின் காலத்தில் இடம்பெற்ற பேச்சுக்களும், சூழல்களும் கொண்டது போன்ற ஒரு காலம். ஒரு வகையில் தந்தை செல்வாவின் காலம் என்றே இதனைச் சொல்லலாம்.

தந்தை செல்வா என்று ஈழத்தமிழ் மக்களால் அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஒரு அரசியல்வாதி மாத்திரமல்ல, அவர் பிரசித்தமான ஒரு வழக்கறிஞரும் ஆவார். யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட செல்வநாயகத்தின் தந்தை ஓர் ஆசிரியராக இருந்து பின்னர் மலேசியாவுக்குப் புலம்பெயர்ந்த காலத்தில் தந்தை செல்வா மலேசியாவின் ஈப்போ நகரில் பிறந்தார்.

அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த தந்தை செல்வா, "சிலோனின்" சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கத்தில் இணைவது, இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை பறித்தல் போன்ற காரணங்களால் அகில இலங்கை காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி இலங்கைத் தமிழரசுக் கட்சியை அமைத்தார். தந்தை செல்வா இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினைக்கு சுயாட்சி முறையினைத் தீர்வாகக் கோரினார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஈழத்தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகள் பேரினவாத தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களின் தாயகத்தில் பலவந்த குடியேற்றங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன், தனிச் சிங்களச் சட்டம் போன்ற அணுகுமுறைகள் தமிழ் மக்களை மிகவும் பாதித்தன. தமிழ் மக்கள் அரசியல் உரிமையற்றவர்களாக, அரசியல் அதிகாரம் இழந்தவர்களாக மாற்றப்பட்டனர். இக்காலகட்டத்தில் தந்தை செல்வநாயகம் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தைத் தொடங்கினார். ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் உரிமைக்காக ஜனநாயக ரீதியாக தீவிரமாகக் குரல் கொடுத்தார்.

சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான எதிர்ப்பை கண்டு அதனை சமாதானப்படுத்தும் விதமாக தந்தை செல்வநாயகத்துடன் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். அது பண்டா - செல்வா ஒப்பந்தம் எனப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் தீவிர இனவாதிகளான ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் பௌத்த பிக்குகளின் கடுமையான பேரினவாத எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது. தந்தை செல்வாவின் தொடர் போராட்டத்தையடுத்து டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தமிழர்களுடன் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களையும் சிங்களப் பேரினவாதிகள் கிழித்தெறிய வைத்தனர்.

ஆனாலும், தந்தை செல்வாவின் அறப்போராட்டங்கள் அன்றைய காலத்து சிங்களத் தலைவர்களை சுயாட்சி முறையை அங்கீகரிக்கத் தூண்டின. குறிப்பாக பண்டாரநாயக்க இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையினை ஏற்றுக்கொண்டார். அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று ஆயுதப் போராட்டம் உருவாகியிருக்காது. தமிழ் இளைஞர்கள், குறிப்பாக தலைவர் பிரபாகரன் துப்பாக்கி ஏந்தியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

அது மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் தமிழ் மக்களின் உரிமையை அவர்களிடம் கையளிக்க வேண்டும் என்பதே உண்மை.

இலங்கையில் ஆள்பவர்கள் அல்லது தலைவர்கள் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை வாய்ப்பேச்சளவில் ஏற்றுக்கொண்டாலும், பேரினவாதிகளைக் கடந்து நடைமுறைப்படுத்தாததே வரலாறு. இதனால், இறுதியில் அவர்களும் பேரினவாதிகளாகின்றனர். இதனால், ஈழத்தமிழ் மக்கள் மேலும் மேலும் ஒடுக்கி அழிக்கப்பட்டார்கள்.

தந்தை செல்வாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் தோல்வியில் முடிந்ததையடுத்து 1976இல் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் தனித் தமிழீழத் தீர்மானமான வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வந்தன. வடகிழக்கு பாரம்பரிய தாயகத்தில் இறைமை கொண்ட தன்னாட்சி அரசு அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருடத்தில் தந்தை செல்வா காலமானார். அவரது இழப்பு, ஈழத்தமிழ் மக்களுக்கு பேரிழப்பு. அறப்போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், தன்னுடைய அடுத்த தலைமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் என்று தந்தை செல்வா குறிப்பிட்டார்.

அதைப்போலவே அதற்குப் பின் வந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஈழத்தமிழ் மக்களின் உரிமை வேண்டி ஆயுதம் ஏந்தினர். அதற்குப் பின் வந்த தமிழ் மிதவாத அரசியல் சூழலும் ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தியது. தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றின் ஊடாக சர்வதேச கவனத்தை ஈர்த்து, இலங்கை அரசுடன் ஓர் இராணுவ பலத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். தமிழ் மக்களின் உரிமையை வழங்காமல் அந்த ஆயுதப் போராட்டத்தை எவ்வாறு அழிப்பது என்று இலங்கை அரசு தனது தீவிரச் செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்காக மாபெரும் இனப்படுகொலை ஒன்றை நிகழ்த்தி தமிழினம் மிகப் பெரும் காயத்திற்குள்ளாகியுள்ள நிலையில், தந்தை செல்வாவின் நினைவுநாள் மிகவும் உண்மையாக உணரப்படவேண்டிய, நினைவுகூரப்படவேண்டிய நாளாகும். தந்தை செல்வா போன்ற தலைவர்களை புரிந்துகொள்வதன் ஊடாக அவர்களின் குரலுக்கு செவி சாய்ப்பதன் ஊடாக வரலாற்றை வேறுவிதமாக எழுதியிருக்கலாம் என்ற அனுபவத்தை இந்த நாள் உணர்த்துகிறது. தந்தை செல்வாவின் சரித்திரம் அதனை உணர்த்துகிறது.

முள்ளிவாய்க்கால் பேரழிவு யுத்தம் முடிந்தபோது தமிழ் ஈழ மக்கள் இனப்பிரச்சினையின் ஆரம்பத்திற்கு வந்திருப்பதைப் போலிருந்தது. இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் தந்தை செல்வா செய்த ஒப்பந்தங்களின் நியாயங்களை ஏற்றுக்கொள்வதைப்போல் ஒரு காலம் தென்படுகிறது. இப்போதும் வரலாற்றை நியாயமாக அணுகும் சூழல் நிலவுகிறது. தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதில் இருக்கும் நியாயத்தை ஏற்பதாக சொல்லும் இலங்கையின் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, தமிழ் மக்கள் நியாயமாக கோரும் தீர்வை, அவர்களின் உரிமையை முன்வைப்பதுதான் உண்மையும், நீதியுமான அணுகுமுறையாகும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை ஒன்றை வழங்கவேண்டும் என்பதும், அவர்களின் தாயகத்தில் ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளுவதை தவிர்ப்பதும், அவர்களை இன அழிப்பு செய்வதை நிறுத்துவதும் எத்தகைய நெருக்கடிகளைக் கடந்தும் பல்வேறு வடிவங்களில் தொடரும் போராட்டங்களின் ஊடாக வலியுறுத்தப்படும். தமிழ் மக்களை எத்தகைய தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்றும், அவர்களின் அபிலாஷை என்ன என்றும் வடகிழக்கில் ஈழத் தமிழ் மக்கள் பகிரங்கமாக கூறுவதுடன், வடக்கு மாகாண சபை போன்ற ஈழத்தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சபைகளும் எடுத்துரைத்துள்ளன.

தந்தை செல்வாவின் இடையறாத போராட்டங்களும், அவரது மரணத்தின் பின்னரான நான்கு தசாப்த போராட்டமும், அதற்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாத அரசுகளின் செயல்களும், தமிழ் மக்களுக்கு மிகவும் உறுதியான, நிலையான தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துகின்றது. இதுபோன்ற மிதவாதக் காலம் ஒன்றில் உரிய வகையில் இனப்பிரச்சினையைத் தீர்க்காதவிடத்து எத்தகைய விளைவுகள் எதிர்காலத்தில் உருவாகும் என்பதற்கும் இக்காலகட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்க மறுப்பவர்கள் மீண்டும் அந்த வரலாற்றை வாழச் சபிக்கப்படுவார்கள் என்று சொல்வார்கள். இலங்கையில் அண்மைய காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியை சேர்ந்த, உதய கம்மன்பில, விமல் வீரவங்ச ஆயியோரும், அரச தரப்பில் இருக்கும் சிலரும், ஏனைய பேரினவாதக் கட்சிகளும் தமிழர்களின் விடயத்தில் மிகவும் கடும் இனவாதப்போக்கை வெளிப்படுத்துகின்றனர். சிங்கள, கொழும்பு ஊடகங்கள் அவர்களின் பேரினவாதக் கருத்துகளுக்கு முக்கியத்துவமும் கொடுக்கின்றன. ஜனநாயகத்தின் பெயரில் இதனை எல்லாம் செய்தால் வரலாற்றை மீண்டும் வாழ சபிக்கப்பட நேரிடும் என்பதையும் இந்நாள் உணர்த்துகிறது.

சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் சிறுதுரும்பையும் எதிர்ப்பார்கள். அவர்கள் எல்லாக் காலகட்டங்களிலும் மிகவும் பெரும்பான்மையாக இருப்பார்கள். அவர்கள் தமிழீழத்தை அல்ல, பஞ்சாயத்து சபையை ஏற்படுத்தினாலும் அதனையும் எதிர்ப்பார்கள். ஈழத்தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்பதும், அவர்களை ஒடுக்கி அழிக்க வேண்டும் என்பதுமே அவர்களின் நோக்கம். அத்தகையவர்களின் விருப்பங்களுக்கும், ஆதிக்கங்களுக்கும் இடமளித்து ஒட்டுமொத்த சிங்கள சமூகத்தையும் பேரினவாதிகளின் தரப்பாக மாற்றக்கூடாது என்பதை இனியும் உணராமல் சிங்கள மக்கள் இருக்க கூடாது.

இன்று இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் காலிமுகத்திடலில் சிங்கள இளைஞர்கள் திரண்டு போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. அன்று தந்தை செல்வா கேட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தால் இலங்கை வங்குரோத்து நிலைக்கு வந்திருக்காது என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பதை தந்தை செல்வாவின் 45ஆவது ஆண்டு நினைவு நாள் ஞாபகப்படுத்துகிறது.

-பா.அரியநேத்திரன்-

## நக்கல் நமசிவாயம்

ராஜபக்ஷ ஆக்கள் மட்டும் இப்போ எதிர்க்கட்சியில் இருந்திருக்கோனும்..! நாட்டை ஆட்டியிருப்பாங்கள் ஓர் ஆட்டு..!



## இன்றைய நாளில்...

- ★ 1865 – அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலைசெய்த ஜோன் பூத் என்பவரை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றன.
- ★ 1867 – கொழும்பிலிருந்து கண்டி வரையிலான முதலாவது ரயில் சேவை நடத்தப்பட்டது.
- ★ 1903 – அத்லெடிகோ மெட்ரிட் கால்பந்து கூட்டமைப்பு அணி உருவானது.
- ★ 1942 – மஞ்சுகோ நகரில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 1549 சீன சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- ★ 1945 – இரண்டாம் உலகப் போர்: நாட்சி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் நடத்தப்பட்டது.
- ★ 1962 – நாசாவின் ரேஞ்சர்-4 என்ற ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.
- ★ 1963 – லிபியாவில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ★ 1964 – தங்கனீக்கா, சன்சிபார் ஆகிய இரு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.
- ★ 1981 – உலகில் முதல் தடவையாக திறந்த கருப்பை அறுவை சிகிச்சை அமெரிக்காவில், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.
- ★ 1981 - மட்டக்களப்பில் பட்டித்திடலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 16 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

# ஹக்கீமின் இரட்டை வேடம்; ஹாபிஸ் நசீர் அவசரக் கடிதம்

2020 ஆகஸ்ட் 05ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்று இரண்டு மாதங்களுக்கு பின் 2020 ஒக்டோபர் மாதமளவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனுவினூடாக தற்போதைய நாடாளுமன்றத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான என்னை, தற்போது அதிகாரத்தில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் தீர்மானமே காரணமாகும் என இராஜாங்க அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருக்கையில், முறையான விசாரணைகள் எதுவுமின்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து என்னை திடீரென நீக்கிவிட்டதாகக் கூறி அவர் எவ்வாறு இந்த நாட்டைத் தவறாக வழிநடத்த முடியும்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் ஹக்கீமுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நமது அயல் நாடொன்றில் இலங்கையின் தூதுவராக இருக்கும் அவரது நண்பருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் அனுமதி இன்றியோ கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியுடன் உறுதியான புரிந்துணர்வுக்கும் ரவூப் ஹக்கீம் வந்ததை அவரால் மறுக்க முடியுமா?

அதனை தொடர்ந்து, 2020 ஒக்டோபர் 18ஆம் திகதி ரவூப் ஹக்கீமின் கார்னிவல் சொந்த அலுவலகத்தில் ஜனாதிபதியின் சகோதரர் பெசில் ராஜபக்ஷவுடன் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் சந்திப்பு நடத்தியதை அவர் மறுக்க முடியுமா?



குறித்த சந்திப்பில் ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில் நான் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.சி.பைசால் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் எங்கள் அனைவரையும் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறும் எங்களை வேண்டிக்கொண்டதோடு, நான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பினாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் அவரது கண்டி மாவட்ட தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு என்பன காரணமாக அவரால் அவ்வாறு செய்ய முடியாமல் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவை, அத்தேர்தலில் அமோக வெற்றியுடன் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியிருப்பதாலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள எனது வாக்காளர்களின் நலன் கருதியும், அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்துடன் இணைந்து வாக்காளர்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை பெற்றுக்கொடுக்க நான் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது அவசியமானதாலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதனை உடன்படுகிறேன்.

அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட எமது அரசியல் கட்சியின் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்க, அவரை நம்பி 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்தேன். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தின் காரணமாக ரவூப் ஹக்கீம் வாக்களித்தமைக்காக எனது விளக்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் ரவூப் ஹக்கீம் தான், நான் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்தியதற்கு ஏற்ப நான் செயற்பட்டதனை ரவூப் ஹக்கீம் நன்றாக அறிந்திருந்ததால் இவ்விடயம் தொடர்பாக ரவூப் ஹக்கீம் என்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்காக என்னை SLMC யில் இருந்து நீக்கிவிட்டதாக இப்போது திடீரென்று ரவூப் ஹக்கீம் கூறுகிறார், குறித்த நீக்கமும் கூட ஜனாதிபதி என்னை நாட்டின் அவசர தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவருக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியினை பெற்றுக் கொண்டதன் பின்னரே இக்குறித்த நீக்கம் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அமைச்சரவையில் அங்கம் வகிக்குமாறு அழைத்ததன் பின்னர் தேசிய நலன் கருதி அதனை நான் ஏற்றுக்கொண்டேன்.

எந்த விசாரணையும் இன்றி என்னை உடனடியாக கட்சியினை விட்டு நீக்கியதாக கூறப்படும் எந்தத் தகவலும் இதுவரை எனக்கு வரவில்லை, அவ்வாறு கிடைத்தால் அதற்குத் தகுந்த பதிலளிப்பேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் மே முதல் வாரத்தில் வெளியீடு

இம்முறை வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மே மாதம் முதல் வாரத்தில் வெட்டுப்புள்ளிகளை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பாடசாலை விவகாரங்களுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல கூறியுள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி 22ஆம் திகதி நடத்தப்பட்டு, மார்ச் 13ஆம் திகதி அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சைக்கு மூன்று இலட்சத்து 40 ஆயிரத்து 508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இந்தப் பரீட்சைகள் இரண்டாயிரத்து 943 நிலையங்களிலும் 108 விசேட பரீட்சை நிலையங்களிலும் இடம்பெற்றது.

## அயர்லாந்து யுவதிக்கு தொந்தரவு கொடுத்த மூவர் கண்டியில் கைது

(கண்டி செய்தியாளர்)

அயர்லாந்து நாட்டு யுவதி ஒருவரின் கையைப்பிடித்து செல்பி எடுக்க வற்புறுத்திய சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியில் நடந்த மேற்படி சம்பவம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் சஞ்சரித்த ஒரு வீடியோவை அடுத்து மேற்படி மூன்று இளைஞர்களும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டிக்கு கடந்த 6 ஆம் திகதி வருகை தந்த மேற்படி யுவதியும் ஜேர்மன் நாட்டு இளைஞர் ஒருவரும் நகரின் வீதியில் நடந்துசென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலியல் தொல்லை மேற்கொண்டதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று இளைஞர்களும் கட்டுகஸ்தோட்டை மற்றும் மெதவல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இச் சம்பவம் தொடர்பில் கண்டி சுற்றுலாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 25.04.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 126 0 41 | 137 0 67 |
| கனேடியன் டொலர் | 148 7751 | 16 6431 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 335 | 41 5806 |
| யூரோ | 25 3452 | 261 2637 |
| ஜப்பான் யென் | 1 4746 | 1 5780 |
| சிங்கப்பூர் டொலர் | 131 1057 | 14 8372 |
| ஸ்ரேலிங் பவுன் | 313 8200 | 33 0562 |
| சுவிஸ் பிராங்க் | 235 3 81 | 248 82 8 |
| ஐ.அ.டொலர் | 22 | 231 3868 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 776 8701 |
| குவைட் | குவைட் தினார் | 0, 84 4386 |
| ஓமான் | ஓமான் றியால் | 758 4880 |
| கட்டார் | கட்டார் றியால் | 80 3 4 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78 1618 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80 0381 |

## ரி 56 ரக துப்பாக்கியுடன் நீர்கொழும்பில் நால்வர் கைது

### கப்பம் கோரும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தகவல்

நீர்கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பில் ரி- 56 ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வியாபாரி ஒருவர் கப்பம் கொடுக்காததால் அவரை படுகொலை செய்ய குழு ஒன்று திட்டமிட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் இந்த சுற்றவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், வெளிநாடு ஒன்றில் மறைந்திருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 32,37,38 மற்றும் 42 வயதுடைய மினுவாங்கொடை மற்றும் கொட்டுகொட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டின் பல பகுதிகளிலும் அரசுக்கு எதிராக போராட்டங்கள்






கண்டி







வாரியபொல



நீர்கொழும்பு







கந்தளாய்







(படப்பிடிப்பு:- கந்தளாய் நிருபர், மஹிந்த சேனாரத்ன, கமல் சுரவீர, சரத் ஹெட்டிகே, இனோகா தமயந்தி, ரேமன்ட் அபோன்சு)



# எரிபொருள் விலை அதிகரிப்பால் நெருக்கடிக்குள் மீன்பிடித்துறை!

## ஐயாயிரம் நீண்டநாள் மீன்பிடிப் படகுகள் துறைமுகங்களில் தேக்கம்

## இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் நிர்க்கதி

(ஜூட் சமந்த)

சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காக பயன்படுத்தும் ஐயாயிரத்துக்கும் அதிகமான நீண்டநாள் மீன்பிடிப் படகுகள் கடலுக்குச் செல்லாமல் துறைமுகங்களில் தரித்து வைக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை நீண்டநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக இந்தப் படகுகளை கடலுக்குள் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் மீன்களை பிடித்து மீண்டும் நாட்டுக்கு எடுத்துவந்து வெளி நாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதனூடாக கடந்த வருடத்தில் மாத்திரம் 380 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

படகுகள் கடலுக்குச் செல்லாமல் துறைமுகங்களில் தரித்துவைக்கப்பட்டுள்ளதால் நீண்டநாள் மீன்பிடிப் படகுகளில் கடமையாற்றிய மீனவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுவந்த இரண்டு இலட்சம் வரையானவர்கள் இந்த நிலைமையினால் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை நீண்டநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்களின் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு




(ரஸீன் ரஸ்மின்)

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று புத்தளத்தில் இடம்பெற்றது.

இலங்கை - சுவிஸர்லாந்து கலாசார அமைப்பின் நிதி அன்பளிப்பினால் 160 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறித்த உலருணவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்படி, புத்தளம் - மன்னார் வீதி 2ஆம் கட்டை பகுதியிலுள்ள மஸ்ஜிதுல் புஹாரி பள்ளிக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 120 குடும்பங்களுக்கும், முள்ளிபுரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கும் மேற்படி உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புத்தளம் - மன்னார் வீதியிலுள்ள மஸ்ஜிதுல் புஹாரி பள்ளி நிர்வாக சபைத் தலைவர் அப்துல் ஹமீத், பேஷ் இமாம் அஷ்ஷெய்க் முஹம்மது ரிபாஸ் மற்றும் இலங்கை - சுவிஸர்லாந்து கலாசார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மஹ்ரூப் சம்சுதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# கனியவளங்கள் தொடர்பான தேசிய கொள்கை வகுப்பில் காலதாமதம்

## முறையான விசாரணையை நடத்துமாறு கோப் குழு பரிந்துரை

இலங்கையின் கனியவளங்கள் தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதில் கால தாமதம் தொடர்பில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கவனம் செலுத்தியுள்ளது.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் 2018 - 2019 நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் குறித்த பணியகத்தின் தற்போதைய செயற்திறன் தொடர்பில் ஆராயும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தலைமையில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கடந்த 21ஆம் திகதி கூடியபோதே இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக, புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்ததுடன், அன்றையதினம் இதன் முழுமையான அறிக்கை குறித்து ஆராய்வதற்குப் போதிய நேரம் கிடைக்காமையால் இப்பணியகம் மீண்டும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டது.

கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அனுமதி 2017ஆம் ஆண்டு அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளபோதும், இதுவரை தேசிய கொள்கை தயாரிக்கப்படாமை கவலைக்குரியதென கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் சுட்டிக்காட்டினார். இதற்கமைய கால அட்டவணையொன்றை அமைத்து ஆறு மாத காலத்துக்குள் தேசிய கொள்கையைத் தயாரிக்க முடியுமா என கோப் குழுவின் தலைவர் கேள்வியெழுப்பினார். ஐந்து மாதங்களுக்குள் இதனைத் தயாரிக்க முடியும் என இங்கு வருகை தந்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த கோப் குழுவின் தலைவர், கனியவளங்கள்



தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரித்திருந்தால் நாட்டில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை காணப்படும் சூழலில் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும் - என்றார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கனியவளங்கள் குறித்த வரைபடமொன்றை உருவாக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வெள்ளவாய, கொட்டிகம்பொக்க பிரதேசத்தில் வன பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலப்பகுதி மற்றும் இதனுடன் இணைந்ததாகக் காணப்படும் தனியார் காணியில் அகழ்வுகளை மேற்கொண்டு பெறப்பட்ட 22094 கியூப் திருவானை கற்கள் தொடர்பில் உரிமைத் தொகை அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து அறவிடப்படாமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இவற்றுக்கான உரிமைத் தொகையை சுரங்க உரிமம் வைத்திருப்பவர்களிடமன்றி ஏற்றுமதி உரிமம் வைத்திருப்பவர்களிடமிருந்தே வசூலிப்பதாக வருகைதந்த அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி, இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் சிபாரிசு செய்தார்.

யான் ஓய நீர்த்தேக்கத் திட்ட கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப்பட்ட மணல்களுக்காக அறவிடப்பட வேண்டிய 2,74,19,690 ரூபா உரிமைத் தொகை ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்படாமை தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மேலும், 2017ஆம் ஆண்டு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இடைநீக்கம் செய்யப்பட்ட இரண்டு அதிகாரிகளுக்கு பாதி ஊதியம், தொழில்சார் கொடுப்பனவுகள், ஊக்கத்தொகைகள் மற்றும் இடைநீக்கம் செய்யப்பட்ட காலத்தில் போனஸ் என்பன வழங்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரிகள் ஒழுக்காற்று விசாரணை உத்தரவின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2019 ஓகஸ்ட் முதல் சேவையில் இருந்தனர். இதற்கான பணத்தை மீண்டும் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குழுவுக்கு ஆஜராகியிருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் முறையான விசாரணையை நடத்துமாறு அமைச்சின் செயாளருக்கு கோப் குழுவின் தலைவர் பரிந்துரைத்தார்.

2011ஆம் ஆண்டுமுதல் 2014ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளுக்கு கள ஆய்வு வருவாய் சேகரிப்பில் வாடிக்கையாளர்களிடம் பெறுமதிசேர் வரி விதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு 9,30,68,185 ரூபா செலுத்தப்பட்டுள்ளதுடன், இது பணியகத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இனங்காணப்பட்டது. எனவே, இதற்குப் பொறுப்பான அதிகாரிகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

இக்குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந்த, எரான் விக்கிரமரத்ன, ஹர்ஷ டி சில்வா, மதுர விதானகே மற்றும் ஜகத் புஷ்பகுமார ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இராஜாங்க அமைச்சர் ஹேரத்தின் வீடு ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைப்பு




இராஜாங்க அமைச்சர் டி.பீ.ஹேரத்தின் வீடு ஆர்ப்பாட்டக்காரர்களால் நேற்று முன்தினம் (24) சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

வாரியபொல நகரில் நேற்று முன்தினம் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாறு இராஜாங்க அமைச்சரின் வீட்டை சுற்றிவளைக்க முயற்சித்தபோது பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதன்போது இராஜாங்க அமைச்சர் வீட்டில் இருக்கவில்லை என்றும், வீட்டுக்குள் நுழையும் பாதை பொலிஸாரினால் வீதித் தடையினால் மறைக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்ட கோஷத்தை வெளியிட்டு அவ்விடத்துக்கு வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் வீதித் தடையை மீறி உள்நுழைய முயற்சித்துள்ளனர்.

இருந்தபோதிலும் இராஜாங்க அமைச்சரின் வீட்டிலிருந்த சிலர் தடிகளை எடுத்துக்கொண்டு முன்னால் வந்துள்ளதுடன் அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் வீட்டுக்கு முன்பாக ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## சட்டவிரோதமாக எருமை மாடுகளை எடுத்துச்சென்ற நபரொருவர் கைது

அனுமதிப்பத்திரமின்றி கெப் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக எருமை மாடுகளை ஏற்றிச் சென்ற சந்தேகநபரொருவர் கஹட்டகஸ்திகிலிய விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் (24) கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிஹிப்பேவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 10 எருமை மாடுகள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றை கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கத்துள்ளனர்.

ரத்மல்கஹவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முச்சக்கரவண்டி தரிப்பிட கட்டணத்தை அறவிடாமலிருக்க புத்தளம் நகரசபை தீர்மானம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் நகரசபை எல்லைக்குட்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிட சாரதிகளுக்கு மறு அறிவித்தல் வரை நகரசபையினால் எவ்வித தரிப்பிட கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது - என புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் அறிவித்துள்ளார்.

புத்தளம் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் தரித்துநின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டி ஒன்றுக்கு நாளாந்த தரிப்பிடக் கட்டணமாக 20 ரூபாவை நகரசபை அறவிட்டு வருகிறது.

இந்நிலையில், நாட்டில் தற்பொழுது நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சலுகை வழங்கும் நோக்கில் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக நகர பிதா குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளை அறிந்து இவ்வாறான சலுகையை வழங்கியதையிட்டு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம், புத்தளம் நகரபிதாவுக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.




சிரேஷ்ட எழுத்தாளர் எஸ்.கே.காசிலிங்கம் தொகுத்த 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற நூலின் அறிமுக விழா நேற்று முன்தினம் (24) கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த புத்தகத்தின் முதல் பிரதியை அல்ஹாஜ் ஹாசீம் உமர் பெற்றுக்கொண்டார்.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, பறையடித்து எதிர்ப்பை வெளிப்படுத்தும் பாரம்பரிய போராட்டம் நேற்று முன்தினம் (24) கொழும்பில் இடம்பெற்றது.

# யாழில் அமெரிக்கத் தூதுவர் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் (24) விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சுங் சிவில் சமூகத் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் மாலை பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதர், கொக்குவிலில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியுள்ள நிலையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமி, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.

சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த அமெரிக்கத் தூதர், எந்தவொரு ஜனநாயகத்திலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் உரிமைகளுக்காக வாதிடுவதில் சிவில் சமூகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் குறித்து விவாதிப்பதற்கும் ஜனநாயக இலங்கைக்கான எமது ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதற்கும் நான் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத் தலைவர்களைச் சந்தித்தேன் - என்றார். அதேவேளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங்கை யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பா சந்தித்து கலந்துரையாடினார்.





யாழ் வந்த அமெரிக்க தூதர் ஜூலி சுங் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார். (யாழ். நிருபர்)



வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சந்தித்து கலந்துரையாடியபோது...



யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பெர்னாட் ஞானப்பிரகாஷம் ஆண்டகையை சந்தித்தபோது...

# யாழ். தீவகப் பகுதி மக்களுக்கு இடர்கால உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு









(மன்னார் நிருபர்)

யாழ். தீவகப் பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கான இடர்கால உலருணவுப் பொதிகள் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது.

தீவகப் பகுதியிலுள்ள பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள், சமூக பணியாளர்களுடன் இணைந்து அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, சரவணை, நயினாதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பகுதிகளுக்கு அங்குள்ள கிராம சேவையாளர்களால் தெரிவுசெய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு 3,350 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவு தட்டுப்பாடு, உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவங் களைக்கொண்ட குடும்பங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை கருத்திற்கொண்டு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு நிவாரணப் பணிகள் நடைபெற்றுவரும் நேரத்தில் தீவக மக்களின் நலனை கருத்திற்கொண்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் குறித்த பகுதிகளின் கிராம சேவையாளர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

# இலங்கையில் வாழ்ந்தால் பட்டினியால் இறந்து விடுவோம்

## தமிழகம் சென்றுள்ள காக்கைதீவு, ஆனைக்கோட்டை வாசிகள் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை மற்றும் காக்கைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த 5 குடும்பங்களில் 09 மாத குழந்தை உள்ளிட்ட 15 பேர் நேற்று திங்கட்கிழமை தனுஷ்கோடியை அண்மித்த கோதண்டராமர் கோவில் கடற்கரைப் பகுதியை சென்றடைந்துள்ளனர்.

அது தொடர்பில் தகவலறிந்த இராமேஸ்வரம் கடலோரப் பாதுகாப்பு பொலிஸார் இவர்களை மீட்டு மண்டபம் கடலோரப் பாதுகாப்பு பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின்போது தாம் நெடுந்தீவு கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் படகில் ஏறியதாகவும், நேற்று அதிகாலை 3 மணியளவில் அப்பகுதியில் இறக்கிவிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதால், எப்படி வாங்கி சாப்பிட முடியும்? மருந்துப் பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரச மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை. தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் காய்ச்சல் தலைவலிக்கு 4 ஆயிரம் ரூபா வரை வசூல் செய்கிறார்கள்.

இதேநிலை நீடித்தால் இலங்கையில் பட்டினிச் சாவு ஏற்பட்டு, அனைவரும் உயிரிழக்க நேரிடும். எனவே, உயிரை காப்பாற்றிக்கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இன்றுவரை 75 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 107 வயது முதியவர் காலமானார்



யாழ்ப்பாணம், கரவெட்டியைச் சேர்ந்த 107 வயதான முதியவரொருவர் காலமாகியுள்ளார். கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் மிக வயதானவராக இவரே அடையாளம் காணப்பட்டிருந்தார். கரவெட்டி, கிழவிதோட்டம் பகுதியைச் சேர்ந்த க.இளையதம்பி என்பவரே உயிரிழந்துள்ளார்.

1915ஆம் ஆண்டு பிறந்த இவர், இலங்கை தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டி கிளைத் தலைவராகவும் செயற்பட்டார்.

# கொடிகாமத்தில் குழு மோதல்; நால்வர் காயம்!

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போக்கட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் (24) இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இதில் வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 17, 22, 19 மற்றும் 53 வயதுடைய நால்வர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் வைத்தியசாலையிலிருந்து தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சேதுகாவலர் வித்தியாலயத்திற்கு கஜேந்திரகுமார் எம்.பி. விஜயம்

(சாவகச்சேரி நிருபர்)



சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி கலைவாணியின் அழைப்பின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் கைதடிசேது காவலர் வித்தியாலயத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பாடசாலையின் தேவைப்பாடுகள் மற்றும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்திடம் கேட்டறிந்திருந்தார்.

பாடசாலை நிர்வாகம் பாடசாலையின் விளையாட்டுத் திடலை புனரமைக்க உதவி கோரிய நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

திகதி 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4742
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,217,730.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 9 3 8 0 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,097,138.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1238
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,714,120.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 2 1 3 0 7 6
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,054,458.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 772
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,481,400.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 20 46 50 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,486,171.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0051
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,661,700.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 32 43 50 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,889,277.40


24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1090
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,763,980.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 248,699,678.00
L 06 29 31 33 36
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடம் திறந்துவைப்பு







(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடம் நேற்று (25) காலை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்திலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து சமய முறைப்படி இரண்டு மாடிகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர், வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினர், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தாய்ச் சங்க செயலாளர் அற்புதசீலன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார், வைத்தியர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

சம்பிரதாயபூர்வமாக கட்டடம் திறந்து வைக்கப்பட்ட நிலையில் வெகு விரைவில் சாவகச்சேரி மருத்துவமனையில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பிக்கும் பட்சத்தில் பளை தொடக்கம் நாவற்குழி வரையான மக்கள் மற்றும் பூநகரி பிரதேச மக்கள் என சுமார் 80,000 மக்கள் இதனூடாக பயனடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஒதுக்கீட்டிற்கு மேலாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடான புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் குறித்த தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்களின் ஜனநாயக போராட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களும் உதவவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான்

(கந்தளாய் நிருபர்)

பொருட்களின் கண்மூடித்தனமான விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றைக் கண்டித்து பொதுமக்கள் முன்னெடுத்துவரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டுமென திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னமாகியுள்ளது. கேட்பார் பார்ப்பாரற்ற நிலையில் பொருட்களின் விலை நாளாந்தம் உயர்த்தப்படுகின்றது. இதனால் மிகப் பெரும்பான்மையான மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தமது எதிர்ப்புகளை இந்த அரசுக்கு நாளாந்தம் நாடுமுழுவதும் ஜனநாயக ரீதியில் தெரிவித்து வருகின்றனர்.



இந்தப் பொருளாதார சீரழிவினால் அரச உத்தியோகத்தர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தினமும் விலை உயர்கின்ற அளவுக்கு அவர்களது சம்பளம் உயரவில்லை. இதனால் பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் கடனுடனும், அரை வயிற்றுடனும் தற்போது தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். கௌரவம் கருதி அரச உத்தியோகத்தர்களால் இதனை வெளியில் சொல்ல முடிவதில்லை.

இந்த விடயம் சொகுசு வாழ்க்கை வாழும், ஜனாதிபதிக்கும், அவரது குடும்பத்தினருக்கும், பதவி ஆசைகொண்டு அமைச்சுகளை பொறுப்பெடுத்துள்ளோருக்கும் தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும். ஏனெனில், நானும் மக்களோடு மக்களாகவே இருக்கின்றேன்.

எனவே, பாதிக்கப்பட்டோர் என்ற வகையில் பொதுமக்கள் முன்னெடுத்துவரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் ஜனநாயக ரீதியில் தமது ஒத்துழைப்புகளை வழங்க முன்வரவேண்டும். இது குறித்து தொழிற்சங்கங்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் இந்த விடயம் குறித்து தீர்மானித்து பொதுமக்களின் போராட்டங்களுக்கு தமது ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்துள்ளனர். இதனை நான் வரவேற்கின்றேன். இதேபோல் ஏனைய சகல அரச உத்தியோகத்தர்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# மீன்பிடிப்பதற்கான வெடிபொருட்களுடன் நபரொருவர் திருகோணமலையில் கைது




திருகோணமலை சல்லிமுனை கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது, சட்டவிரோதமான முறையில் வோட்டர் ஜெல் (Water Gel) வர்த்தக வெடிமருந்துகளை பயன்படுத்தி தயார்படுத்தப்பட்ட 08 வெடிபொருட்களின் பாகங்கள், 07 மின்சாரம் அல்லாத டெட்டனேட்டர்கள் மற்றும் 2.5 அங்குல நீளமுள்ள 07 பாதுகாப்பு உருகிகள் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, கிழக்கு கடற்படை கட்டளைக்குட்பட்ட இலங்கை கடற்படை கப்பல் வலகம்பா நிறுவனத்தின் கடற்படையினர் 2022 ஏப்ரல் 23ஆம் திகதி திருகோணமலை சல்லிமுனை கடற்கரையில் மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு ரோந்து நடவடிக்கையின்போது சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவரை சோதனை செய்தனர். அப்போது சந்தேகநபரிடமிருந்து வெடிமருந்துகளை பயன்படுத்தி தயார்படுத்தப்பட்ட 08 வெடிபொருட்களின் பாகங்கள், 07 மின்சாரம் அல்லாத டெட்டனேட்டர்கள் மற்றும் 2.5 அங்குல நீளமுள்ள 07 பாதுகாப்பு உருகிகள் கண்டுபிடிக்கப்பட்டன. குறித்த வெடிபொருட்கள் சட்டவிரோதமான மீன்பிடித் தொழிலுக்கு பயன்படுத்துவதற்காக தயார்செய்யப்பட்ட வெடிபொருட்கள் என நம்பப்படுகிறது.

மேலும், கடற்றொழில் சமூகத்தைச் சேர்ந்த மிகக்குறைந்த எண்ணிக்கையிலான மீனவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடித் தொழிலின் காரணமாக கடல்சார் சூழலுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் கடற்படையினர் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் திருகோணமலை, குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக குச்சவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கலை மன்றங்களுக்கான வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கிவைப்பு

(மாளிகைக்காடு நிருபர்)



கலை மன்றங்களுக் கான வருடாந்த ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவானது, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒவ்வொரு வருடமும் கலை மன்றங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டமாகும்.


நலிவுற்ற நிலையில் இருக்கின்ற கலைஞர்களைப் பேணிக் காத்தல், போசனையளித்தல், பொருளாதார ஆற்றலை வளர்த்தல், அவர்களை கௌரவப்படுத்தல் தேசத்தின் கடமையும் அரசாங்கத்தின் பொறுப்புமாகும்.

அந்தவகையில் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும் அய்மன் கலை மன்றம், சன்ரைஸ் கலை மன்றம், இஸ்லாமிய மரபுரிமைகள் கலாசார மன்றம், மீரா கோலாட்டக் குழு ஆகிய கலை மன்றங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் (மத்திய) திருமதி ஏ.எல். நௌபீஸா மற்றும் கலாசார உத்தியோகத்தர் (மாகாணம்) திருமதி வசந்தா ரஞ்சனி, கலாசார அதிகாரசபை சார்பாக உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள் விசேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)




முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், பரிசோதனை செயற்பாட்டினையும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய நேற்று (25) அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை, பெரியநீலாவணை, கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரோந்து நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை விசேட அதிரடிப்படையினர், முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இத் திடீர் சோதனையில் சந்தேகத்திற்கிடமானவர்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் சுயதொழில் உபகரணங்கள் வழங்கிவைப்பு






(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (25) பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

விதாதா வள நிலையத்தின் "கிராமத்திற்கு ஒரு பயனாளி" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் 11 இலட்சம் ரூபா செலவில் 20 கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார ஊக்குவிப்பு சுயதொழில் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தின் கணக்காளர் றிஸ்வி யஹ்சர், விதாதா வள நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.மபாஸ், வெளிக்கள இணைப்பாளர் கே. நவநீதன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயனிகளுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு இயந்திரங்களை வழங்கினர்.

# மூழ்கும் நிலையிலுள்ள அரசாங்கக் கப்பலில் நடுவில் அமர்ந்திருக்கும் முஷாரப் நயவஞ்சகன்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை அமைப்பாளர் மனாப் காட்டம்

(மாளிகைக்காடு நிருபர்)

நயவஞ்சகனின் அடையாளங்களான பேசினால் பொய் பேசுவான், வாக்களித்தால் மாறு செய்வான், அவன் மீது நம்பிக்கை வைக்கப்பட்டால் மோசடி செய்வான் எனும் சகல விடயங்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பிலான நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி மொட்டு அரசின் முதன்மை முட்டாக மாறி இராஜாங்க அமைச்சராக இப்போது பதவியேற்றிருக்கும் எஸ்.எம்.எம்.முஷாரப்பை காண்கிறேன். அணைகின்ற இடத்திற்கு ஏற்றாற்போல பொய்களை கொண்டு ஆணியடிக்கும் ஒருவராகவும் அவர் தொடர்ந்தும் இருந்து வருகிறார் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை அமைப்பாளரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப் சாடியுள்ளார்.

கல்முனையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (24) காலை ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசிய அவர், தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த தேர்தல் காலத்தில் கட்சிக்காக செலவு செய்து மும்முரமாக தேர்தல் பணிசெய்த சக வேட்பாளர்களான கே.எம்.ஏ.ரஸாக் (ஜவாத்), எம்.ஏ.தாஹீர், எம்.ஐ.எம்.மாஹீர் போன்ற எவரையும் தேர்தல் பணிகளுக்காக பொத்துவிலுக்கு அனுமதிக்காது கட்சி கட்டுக்கோப்புகளையும், கொள்கைகளையும் மீறி செயற்பட்டார். அரசியல் பழிவாங்களினால் சிறையில் தலைவரின் குடும்பமே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் எவ்வித சலனமுமின்றி மொட்டுக்கு தைரியமாக முட்டுக்கொடுத்தவர் இன்று புதிய சத்தியவான் வேடம் போட்டுள்ளார்.



எவ்வித அரசியல் அனுபவமுமில்லாத எஸ்.எம்.எம்.முஷாரபை கட்சிப் பதவிகளை வழங்கியும், இன்னோரன்ன சலுகைகளை கொண்டும் அழகு பார்த்து நாடாளுமன்ற உறுப்பினராக பதவியுயர்த்தி கௌரவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கும் கட்சி தலைமைக்கும் துரோகம் செய்தவர் பின்நாட்களில் ஜும்மா தொழுது விட்டு ஜும்மா பள்ளிவாசலின் மிம்பரின் முன்னிலையில் வைத்து பொய்யான கதைகளை தெரிவித்து மக்களை முட்டாள்களாக்குவதாக எண்ணி அவர் தன்னை பொய்யனாக அடையாளம் காட்டிக்கொண்டார்.

இப்போது நிமிடத்திற்கு பத்து பொய்களைக் கூறி எங்கு எந்த பொய்களை கூறினோம் என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார். நாடறிந்த பொய்யனாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட எஸ்.எம்.எம்.முஷாரப் சிறுபான்மை மக்களின் உரிமைக்குரலாக இறைபக்தியுடன் ஜனநாயகத்தை மதித்து நடந்துகொண்டு நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற துடித்துக்கொண்டிருக்கும் மக்களின் தலைவன் ரிஷாட் பதியுதீனை நோக்கி சத்தியமிட சவால் விடுவது வேடிக்கையாக உள்ளது.

பொத்துவில் மக்களின் வாக்குகளினால் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வந்ததாக எண்ணிக்கொண்டு அரசியல் செய்யும் முஷாரப் அரசியல் பரப்பில் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் ஏறி இராஜாங்க அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டு சமூக அரசியல் செய்வதாக இப்போது கதையளப்பதை இந்த நூற்றாண்டின் முதற்தர முட்டாள்தனமாக நான் பார்க்கிறேன்.

போர்ட்சிட்டி வாக்கெடுப்பு தொடர்பிலான கட்சித்தீர்மானத்தை கூட இருந்து ஊடகங்களுக்கு அறிவித்துவிட்டு பிறகு கட்சி நிலைப்பாடுகள் தொடர்பில் எதுவும் தெரியாது என்று கூறிய அவர், தொடர்ந்தும் மாறி மாறி நாக்கு பிரட்டிக்கொண்டிருக்கிறார். அவர் இப்போது அவரோடு இணைந்து 20இற்கு கையுயர்த்தியவர்களுக்கே துரோகம் செய்துவிட்டு மக்களின் அபிலாஷைகளை மீறி பதவியாசை கொண்டு அந்த கூட்டிலிருந்தும் வெளியேறியிருப்பது அவரது அரசியலின் முதிர்ச்சியற்ற தன்மையை காட்டுகிறது. உண்மைக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை நேசிக்கும் எந்த ஆதரவாளரும் இவருடன் உறவை பேணக்கூடாது. மேலும் அவர் தலைவரை சத்தியம் பண்ண அழைக்கும் முன்னர் ஒருதடவை தன்னை சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் - என்றார்.

# ரமழானை முன்னிட்டு பள்ளிக்குடியிருப்பில் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(அட்டாளைச்சேனை நிருபர்)

புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தியாவைச் சேர்ந்த அமெரிக்காவில் வசிக்கும் தனவந்தர் மூலம் ஆறு இலட்சம் ரூபா இச்செயற்றிட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

இதில் 5 இலட்சம் ரூபாவுக்கு உலருணவு நிவாரணமும், ஒரு இலட்சம் ரூபா இப்பிரதேசத்திலுள்ள மூன்று பள்ளிவாசல்களுக்கு இப்தார் நிகழ்வு மற்றும் கியாமுல் லைல் சஹர் உணவுக்காகவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அக்கரைப்பற்று பிரதேச சபை உதவித் தவிசாளர் எம்.ஐ.எம்.ஹக்கிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் அதிதிகளாகக் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினர்.

எம்.ஐ.எம்.ஹக்கீமின் பெரும் முயற்சியின் காரணமாக வருமானம் குறைந்த நூறு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கப்பட்டன.








கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் 2022ஆம் ஆண்டிக்கான தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா பாடசாலை அதிபர் எஸ்.மணிமாறன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதிகள் மற்றும் பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர்கள் கலந்துகொண்டதுடன், தரம் ஒன்று புதிய மாணவர்களை மாலை அணிவித்து வரவேற்றனர். (காரைதீவு நிருபர்)

# கல்லடியில் இடம்பெற்ற இறையிரக்கத்தின் பெருவிழா







(மட்டக்களப்பு நிருபர்)

கத்தோலிக்கர்களின் சிறப்பு விழாக்களில் ஒன்றான இறையிரக்கத்தின் பெருவிழா நேற்று முன்தினம் (24) கொண்டாடப்பட்டது.

2000 ஆண்டுகளுக்கு முன் புனித பட்டம்பெற்ற துறவற சபை துறவி பவுஸ்தீனாவுக்கு 1930ஆம் ஆண்டு 14 முறை இருதய ஆண்டவர் காட்சியளிக்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டதன் காரணமாக திருத்தந்தை 2ஆம் நோயல் ஜோன் போல் உயிர்த்த காலத்தின் 2ஆவது ஞாயிறு தினத்தை இறையிறக்க ஞாயிறு தினமாக பிரகடனப்படுத்தினார் என கூறப்பட்டு கத்தோலிக்க திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உயிர்த்த காலத்தின் இரண்டாவது ஞாயிறு தினத்தை இறையிரக்க ஞாயிறு தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இறையிரக்க பெருவிழாவை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திரு இருதயநாதர் திருச்சொரூபம் மக்கள் வழிபாட்டுக்காக ஆசீர்வதிக்கப்பட்டு, விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை சுவைக்கீன் ரொஷான் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற விசேட திருப்பலியில் பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார், அருட்பணி ஜேம்ஸ் அடிகளார் இணைந்து திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர்.

இந்த விசேட திருப்பலியில் கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குமக்கள் மற்றும் அயல் பங்கு மக்களென அதிகளவிலான பக்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனையில் தேசிய மக்கள் சக்தி தலைமையில் ஆர்ப்பாட்டம்










(பாறுக் ஷிஹான்)

மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசாங்கம், ஜனாதிபதிக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர ஐக்கிய சதுக்க முன்றிலில் நேற்று முன்தினம் (24) இரவு தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் தலைமையில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டமானது "74வருட சாபக்கேட்டை இல்லாதொழிப்போம் - மக்களை துன்புறுத்தும் அரசாங்கத்தை விரட்டியடிப்போம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், பல்வேறு வாசகங்களும் எழுதப்பட்ட சுலோகங்களை போராட்டக்காரர்கள் ஏந்தி பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இப்போராட்டத்தில் கொள்ளை பணம் எங்கே, அடுப்பு மூட்ட கேஸ் இல்லை, நாட்டில் எதுவுமில்லை, பெசில் வேண்டாம், மஹிந்த வேண்டாம், கோட்டாவே வெளியேறு, நாட்டில் எதுவுமில்லை, மக்களுக்கு பசி, பசளை தா, பெற்றோல் தா, பெசிலே வெளியேறு, கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு, வாகனம் ஓட பெற்றோல் இல்லை, நாட்டில் மின்சாரம் இல்லை, பிள்ளைகள் குடிக்க பால்மா இல்லை, குழந்தைகள் படிக்க கரண்ட் இல்லை, பரீட்சை இல்லை, அரசே வீட்ட போ, கோ ஹோம் கோட்டா என கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இதன்போது ஜே.வி.பியின் முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ, தேசிய மக்கள் சக்தி பிரதேச அமைப்பாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் அன்றாடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## மூதூரில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த வெள்ளரிச்செய்கையில் சிறந்த அறுவடை





(நிந்தவூர் நிருபர்)

திருகோணமலை மாவட்டம், மூதூர் அறபாநகர் கிராமத்தில் முதன்முறையாக வெள்ளரிக்காய் செய்கை மேற்கொள்ளப்பட்டு சிறந்த விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 12 விவசாயிகளிடையே பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்த வெள்ளரிச்செய்கையில் இரண்டு விவசாயிகள் அறுவடையை முதன் முதலில் மேற்கொண்டுள்ளனர்.

70 தொடக்கம் 75 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட இப்பயிர்ச்செய்கை மூலம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.

அறுவடை செய்யப்பட்ட வெள்ளரிக்காய்க்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த சந்தை வாய்ப்புள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இந்த பரீட்சார்த்த முயற்சியில் அரை ஏக்கர் காணியில் 1.5 அடிக்கு ஒரு நாற்று என்ற வீதத்தில் 3,000 நாற்றுகள் நடப்பட்டன.

## பொருட்களை பதுக்கிவைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முறையான திட்டங்களை வகுத்து பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுமாறு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், மாநகர முதல்வர் ஆகியோரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சில பொருட்களைப் பெறுவதில் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நாளுக்கு நாள் அதிகரித்துவரும் விலைவாசியை பொதுமக்கள் எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியாமல் உள்ளனர். குறிப்பாக, இறைச்சி, மீன் போன்றவை மிகக் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன.

விவசாய வேலைகள் இடம்பெற்றுவருவதனால் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதேபோன்று அரச ஊழியர்கள், அன்றாடம் தொழில்செய்யும் வாகன உரிமையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் எரிபொருட்களைப் பெறுவதில் முறையான திட்டம் இல்லாது சிரமப்பட்டு வருகின்றனர். இதனை கருத்திற்கொண்ட சில இடைத்தரகர்கள் எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவுசெய்து பதுக்கி வைத்து அப்பொருளுக்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மிகக் கூடுதலான விலைக்கு விற்பனைசெய்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சில பிரதேச செயலகங்களில் முறையான திட்டமிடல்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதேபோன்று ஏனைய பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, எரிபொருட்கள் மற்றும் தட்டுப்பாடுள்ள அத்தியாவசியத் தேவைகளை கருத்திற்கொண்டு முறையான திட்டமிடல்களை மேற்கொண்டு அவற்றை பொதுமக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தி இலகுபடுத்துமாறு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொதுமக்கள் பிரதேச செயலாளர், மாநகர முதல்வர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## ஊடகர் மோகனதாஸின் திடீர் மறைவு ஊடகத்துறைக்கு ஈடில்லா பேரிழப்பு

### சமாதான ஊடக அமைப்பின் தலைவர் ஜெஸ்மின் அனுதாபம்

(நிந்தவூர் நிருபர்)

நாடகக் கலைஞர், ஊடகவியலாளர், எழுத்தாளர், ஆசிரியர் என்று பல துறை சார்ந்து தனது பன்முகத் திறமையை வெளிக்காட்டிய துறைநீலாவணையைச் சேர்ந்த பாக்கியராஜா மோகனதாஸின் திடீர் மறைவு ஊடகத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

வாழ்நாளில் சாதிக்கவேண்டும் என்ற துடிப்போடும் சமூக கரிசனையோடும் எமது பிரதேசங்களில் நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குகொண்டு அவற்றைப் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் பதிவிட்டு கலை இலக்கியத்துறைக்கு பெரும் துணையாக இருந்த மோகனதாஸ், கலை, இலக்கியம், அரசியல் சமூகம் சார்ந்து நூற்றுக் கணக்கான கட்டுரைகளையும் பத்திரிகைகளில் வெளியீடுசெய்து, கலைஞர்களின் நேர்காணலை படைப்பாக்க ஆளுமைகள் என்ற தலைப்பில் நேர்காணல் தொகுப்பாக உருவாக்கி திருகோணமலையில் வெளியீடு செய்தும் வைத்தார்.



இலங்கையிலுள்ள கலை, இலக்கிய, சமூக செயற்பாட்டாளரான, ஊடக, கலை இலக்கிய செயற்பாட்டாளரான பா.மோகனதாஸிற்கு தனது ஊடக அமைப்பின் சார்பில் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக தனது அனுதாப அறிக்கையில் சமாதான ஊடக அமைப்பின் தலைவர் எம்.எம்.ஜெஸ்மின் தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அதிபர், ஆசிரியர் போராட்டம் காரணமாக கிழக்கில் கற்றல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

(பாண்டிருப்பு நிருபர்)


அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக நேற்று (25) கிழக்கு மகாணத்திலுள்ள பல பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதற்கமைய பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பல பாடசாலைகள் இயங்கவில்லை. அதிபர், ஆசிரியர்களின் வரவின்மையினால் மாணவர்களும் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை.



இதேவேளை, கல்விசாரா, ஊழியர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பாடசாலைக்கு வருகை தந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. மாணவர்களை அழைத்து வந்த பெற்றோர்கள் ஆசிரியர்கள் இன்மையால் தங்கள் பிள்ளைகளை மீண்டும் வீடுகளுக்கே அழைத்துச் சென்றனர்.

## போடியார் புலம்பல்!



**நிலையான அபிவிருத்தித் திட்டங்கள இலங்கை அரசு வரவேற்கும் எண்டு ஜனாதிபதி கோட்டா ஒளிச்சித்து இருந்து இப்ப சொல்லுறாரு எலுவா?**

**அவரே நிலையாக இருக்க முடியாமல் அவருக்கு வாக்கு போட்ட சிங்கள மக்கள் "கெற் அவுட்" என்று சொல்லுறத கேட்டுத்து இந்த மனிசன் நிலையான அபிவிருத்திய கதைக்கிறது ஆர பேய் காட்டுறாருடாப்பா..?**

## கனரக வாகனம் மோதி மரமொன்று முறிந்ததில் போக்குவரத்து பாதிப்பு

### மின்விநியோகமும் தடை



(மட்டக்களப்பு நிருபர்)

பாரிய மரம் மீது கனரக வாகனம் மோதியதில் மரம் நடுவீதியில் விழுந்து இரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் தாழங்குடா சந்தியில் நேற்று (25) காலை இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து மரத்தை அறுத்து வீதிப் போக்குவரத்தை சீர்செய்தனர்.

குறித்த பிரதேசத்தில் மரம் விழுந்து மின்கம்பங்கள் விழுந்தமையால் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்கள் பழைமை வாய்ந்த இம்மரம் பிரதேசத்தின் அடையாளமாகக் காணப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

## ஒரு மாத காலமாக சைக்கிள்களை திருடியவர் சாய்ந்தமருதில் கைது

(நிந்தவூர் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஒரு மாத காலமாக சைக்கிள்கள் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய நபர் சாய்ந்தமருது பொலிஸாரால் நேற்று (25) கைதுசெய்யப்பட்டுள்ளார்.



சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீனின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் வை.பி.அய்யூப் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கல்முனையில் வைத்து சைக்கிள் திருடிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சவளக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது ஹனிபா சுபைர் எனும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சந்தேக நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சாய்ந்தருது, கல்முனை, மாளிகைக்காடு பாண்டிருப்பு போன்ற பிரதேசங்களிலிருந்து சைக்கிள் களவாடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் திருடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் களவாடிய சைக்கிள்கள் பல இடங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி வை.பி.அய்யூப் தெரிவித்தார்.

## தந்தை செல்வாவின் 45ஆவது சிரார்த்த தினம் இன்று

(வெல்லாவெளி நிருபர்)

தமிழ் இனத்தின் அடையாளமாகத் திகழ்ந்தவரும், தமிழ்த் தேசிய பற்றாளருமான தந்தை செல்வாவின் 45ஆவது சிரார்த்த தினம் இம்முறை அனுஷ்டிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளையால் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தந்தை செல்வா நினைவு முற்றத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக இன்று (26) காலை 9 மணிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான பொன். செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.



இந்நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து, தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தி, அஞ்சலி வணக்கம் இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து தந்தை செல்வாவின் பெயரால் மண்முனை தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சீ.புஸ்பலிங்கம் தலைமையில் அரசடித்தீவு கதிரொளி சிறுவர் இல்லத்தில் அன்னதானமொன்றும் இடம்பெறவுள்ளது.

எனவே, இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய பற்றாளர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

# அதிபர், ஆசிரியர்களின் விடுமுறை போராட்டத்தால் மலையகத்தில் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு







**(க.கிஷாந்தன், பி.கேதீஸ், மனுர சுதத் செல்லஹேவா)**

எரிபொருள் விலையேற்றம், பஸ் கட்டண உயர்வு, பாடசாலை போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் நேற்று (25) அதிபர், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சுகயீனப் போராட்டத்திற்கு மலையகத்தின் ஹட்டன், தலவாக்கலை, மஸ்கெலியா உள்ளிட்ட நகரங்களிலும் அதிபர், ஆசிரியர்கள் தமது ஆதரவை வழங்கியிருந்தனர். மேலும் நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் ஆசிரியர்களான தம்மை சிறந்த மனநிலையுடன் கடமையாற்ற அரசு வழி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டில் காணப்படும் எரிபொருள் பிரச்சினை காரணமாக ஆசிரியர்கள் தொழிலுக்கு செல்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்ற அதேவேளை, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பல மணிநேரம் வரிசையில் நின்று பொருட்களை பெற்றுக்கொள்வதினால் குறித்த நாட்களில் நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாமை காரணமாக மனவேதனைக்கும் தள்ளப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் பல்வேறு பாடசாலைகள் நேற்று மூடியநிலையில் காணப்பட்டதுடன், ஆசிரியர்கள் தபால் அலுவலகங்களில் தமது சுகயீன விடுமுறை தந்திகளை பாடசாலைக்கு அனுப்பும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அதிபர், ஆசிரியர்களின் இந்த சுகயீனப் போராட்டம் தொடர்பான தகவல்களை அறியாத ஒருசில மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்து திரும்பிச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மஸ்கெலியாவில்...**

**(செ.தி.பெருமாள்)**

நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்கள் நேற்று (25) சுகயீன விடுமுறை போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். இதன் காரணமாக மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 24 தமிழ்ப் பாடசாலைகள், ஒரு முஸ்லிம் பாடசாலை மற்றும் 03 சிங்களப் பாடசாலைகளென 28 பாடசாலைகளும் மற்றும் நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 07 தமிழ்ப் பாடசாலைகள் உள்ளடங்கலாக மொத்தமாக 35 பாடசாலைகளில் பணியாற்றும் 788 ஆசிரியர்கள் நேற்று சுகயீன விடுமுறையை மேற்கொண்டிருந்ததால் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

ஒருசில பாடசாலைகளுக்கு குறைந்தளவான மாணவர்களின் வருகை பதிவாகியிருந்த போதிலும் ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை காரணமாக மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகள் இல்லாது மீண்டும் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

நாடு பல்வேறு இன்னல்களை சந்தித்துவரும் இச்சூழ்நிலையில் ஆட்சியாளர்கள் சற்று விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். இதனாலேயே நாட்டில் போராட்டங்கள் முடிவுக்கு வருவதோடு நாட்டு மக்களும் ஓரளவாவது நிம்மதியாக தமது அன்றாட கடமைகளை முன்னெடுக்க முடியும். இதனால் எதிர்கால எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்படுகின்றது என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க இ.தொ.கா. தீர்மானம்

## தவிசாளர் ராமேஸ்வரன் எம்.பி.



**(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)**

''மக்கள் பக்கம் நின்றே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும் முடிவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்துள்ளது'' என்று இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இ.தொ.காவின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர் தொலைபேசி வாயிலாக கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என அறிவிப்பு விடுத்தவர்களுக்குகூட, அது வெற்றிபெறுமா என்ற சந்தேகம் இருந்தது. அதுமட்டுமல்ல. உள்ளடக்கங்கள் பற்றி எம்முடன் பேச்சு நடத்தப்படவில்லை. அதனால்தான் முன்னதாக நடுநிலை என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தற்போது பிரேரணை பற்றி எமக்கு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. அது வெற்றியளிக்கக்கூடிய சாத்தியமாகக் காணப்படுகின்றது. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்து. மக்களின் தீர்ப்பே, எமது அரசியல் நடவடிக்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயற்படும் கட்சியே இ.தொ.கா.

அன்றுமுதல் இன்றுவரை நாம் தடம்மாறி பயணித்தது கிடையாது. அந்தவகையில் மக்கள் முடிவை ஏற்று, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்போம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.




பதுளை எவ்.ஐ.ஓ.எச். அமைப்பு, இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடனான வெறுக்கத்தக்க பேச்சுகளை தடுப்பதற்காக சமூக ஊடகங்களை பாவித்தல் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு நேற்று முன்தினம் (24) பதுளை ரிவர் சைட் விடுதியில் நடைபெற்றது.

டி.ஐ.ஆர்.சி. பதுளை மாவட்ட இணைப்பாளர் இராமச்சந்திரன் ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் வளவாளர் ஹரித தஹநாயக்க மற்றும் செயலமர்வில் கலந்துகொண்டவர்களை படங்களில் காணலாம்.

**(பதுளை நிருபர்)**

# நான்கு கோரிக்கைகளை முன்வைத்து சுகயீன விடுமுறை போராட்டத்தில் குதிப்பு

## தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிப்பு

**(தலவாக்கலை நிருபர்)**

அதிபர், ஆசிரியர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு, பாடசாலை சீருடையில் செல்லும் மாணவர்களுக்கு அரைவாசி பஸ் கட்டணம் அறவீடு, மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைத்தல் உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்களால் நேற்று(25) திங்கட்கிழமை சுகயீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய காலத்தில் எரிபொருள் விலையேற்றம் மற்றும் பஸ்கட்டண அதிகரிப்பை கருத்திற்கொண்டு போக்குவரத்து கட்டணத்தை தமது சம்பள பணத்துடன் இணைத்து வழங்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளதுடன் வாழ்வாதாரத்திலும் பாரிய பின்னடைவையும் எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பஸ் கட்டண உயர்வினால் மாணவர்கள் தினமும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவிப்பதை தெளிவாக அறியமுடிகிறது.

எனவே பாடசாலைக்கு பஸ் ஊடாக பயணிக்கும் மாணவர்களின் நலன் கருதி தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் அரைவாசி கட்டணத்தை அறவிட அரசு பரிந்துரைக்க வேண்டும்.

மேலும் தனியார் பஸ் உரிமையாளர்கள் இவ்விடயத்தில் கருணை அடிப்படையில் செயற்பட முன் வர வேண்டும். அரசாங்க பஸ் சேவையில் இந்த நடைமுறையை உடனடியாக அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும். மக்களின் வாழ்வாதார சுமையை குறைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அவ்வறிக்கையில் முன்வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் தாக்கப்பட்டு மூன்று பற்கள் உடைப்பு

## கண்டியில் சம்பவம்

**(கண்டி நிருபர்)**

போத்தலொன்றில் பெற்றோல் வழங்க மறுத்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் சந்தேக நபர் ஒருவரினால் தாக்கப்பட்டு மூன்று பற்கள் உடைக்கப்பட்ட சம்பவமொன்று கண்டியில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கண்டி தென்னேக்கம்புனவில் அமைந்துள்ள தலாத்துஓயா மாறஸ்ஸன பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர், கண்டி தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள அதேவேளை. சம்பவத்தில் ஊழியரின் மூன்று பற்கள் உடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. சந்தேக நபரை கைதுசெய்ய கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.







நுவரெலியா சாந்திபுரவில் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு சமுர்த்தி சமூக அமைப்பும் இளைஞர் கழகமும் இணைந்து கடந்த சனிக்கிழமை (23) விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தன. இதன்போது மரதன், கண்கட்டி முட்டி உடைத்தல், தேங்காய்த் திருவுதல், தலையணைச் சமர் மற்றும் பலூன் உடைத்தல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெற்றன. **(செ.திவாகரன்)**

# நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டு இடைக்கால அரசுக்கு செல்ல வேண்டும்

## பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி



**(கண்டி நிருபர்)**

காலிமுகத்திடலிலிருந்து இளைஞர்கள் விடுக்கும் கோரிக்கையை நாட்டின் தலைவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எனவே, நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு இடைக்கால அரசொன்றுக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று முன்தினம்(24) கண்டியில் வைத்து நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை தீர்ப்பது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் பிரதிகளை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களுக்கு கையளித்தபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றிணைந்த தேசிய அரசொன்றை நிறுவுதல், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை அகற்றுதல், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருதல் போன்ற பல விடயங்கள் அடங்கிய புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்று உருவாக்குவது தொடர்பான ஆலோசனைகள் அடங்கியவாறு இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசு என்ற வகையில் பொதுமக்களின் கருத்துகளை புறந்தள்ளிவிட்டு எதனையும் முன்னெடுக்க முடியாது. எனவே, சர்வ கட்சிகளினதும் கருத்துகள் பெறப்பட வேண்டும். அதற்கான ஒரு வழிமுறை அவசியமாகிறது. தற்போதைய நிலைக்கு முறையான தீர்வைப் பெற்றுக்கொள்ளாது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மட்டும் வைத்துக்கொண்டு எத்தகைய திட்டங்களையும் முன்னெடுக்க முடியாது.

நாடாளுமன்ற பெரும்பான்மையை எதிர்பார்க்காது சகல கட்சிகளும் இணைந்து ஏற்படுத்தும் சர்வ கட்சி தேசிய அரசானது, உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இரண்டாவது முறையாகவும் பிரான்ஸ் ஜனாதிபதியாக மெக்ரோன் தெரிவு




பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் தீவிர வலதுசாரி கொள்கையைக் கொண்ட மரின் லெபென்னை (Marine Le Pen) தேற்கடித்து, இம்மானுவல் மெக்ரொன் (Emmanuel Macron) இரண்டாவது முறையாகவும் பிரான்ஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் 20 ஆண்டுகளில் இரண்டாவது முறையாகவும் வெற்றிபெற்ற முதல் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரொனாவார்.

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டில் மட்டுமன்றி பிற நாடுகளில் வசிக்கும் பிரெஞ்சு குடியுரிமை பெற்றவர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாவர். ஜனாதிபதியின் பதவிக் காலம் அடுத்த மாதம் நிறைவடையவிருந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

இதில், தற்போதைய ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரொன் மற்றும் மரீன் லெபென் உள்ளிட்ட 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் மெக்ரொன் 27.8 சதவீத வாக்குகளும், மரீன் லெபென் 23.2 சதவீத வாக்குகளும் பெற்றனர்.

அந்நாட்டு சட்டப்படி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், 10ஆம் திகதி நடைபெற்ற வாக்குப் பதிவில் எவருக்கும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்காத நிலையில், முதல் இரு இடங்களைப் பிடித்த தற்போதைய ஜனாதிபதி மெக்ரொனுக்கும், தீவிர வலதுசாரி கொள்கையைக் கொண்ட மரீன் லெபென்னுக்கும் இடையே இறுதிக்கட்ட வாக்குப் பதிவு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வாக்குப் பதிவு முடிவில் மெக்ரொன் 58 சதவீதத்துக்கும் மேல் வாக்குகள் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். 44 வயதான ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரொனுக்கு தனது இரண்டாவது பதவிக்காலத்தில் பிரான்ஸை சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சவால்கள் காத்திருக்கின்றன.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் இவர்கள் இருவருக்குமிடையேதான் போட்டி நிலவியது. அப்போது மெக்ரொன் 66.1 சதவீத வாக்குகளும், லெபென் 33.9 சதவீத வாக்குகளும் பெற்றனர். தற்போது குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் லெபென் தோல்வியடைந்திருப்பது பிரான்ஸில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தீவிர வலதுசாரிகள் நெருங்கிவிட்டதையே தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது முறைவாகவும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இம்மானுவல் மெக்ரொனுக்கு பல்வேறு நாட்டு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## பிரதமர் மோடிக்கு 'லதா மங்கேஷ்கர்' விருது



மறைந்த பாடகி லதா மங்கேஷ்கர் பெயரிலான விருது பிரதமர் மோடிக்கு மும்பையில் வழங்கப்பட்டது.

இதன்போது தமது சகோதரிபோல் வருடந் தோறும் ராக்கி கட்டும் லதா மங்கேஷ்கரை இந்த ஆண்டில் தவற விட்டதாக மோடி உருக்கமாக குறிப்பிட்டார்.

லதா மங்கேஷ்கர் அறக்கட்டளை சார்பில் தமக்கு கிடைத்த இந்த மதிப்புக்குரிய விருதை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பதாக மோடி தெரிவித்தார்.

## சூடானில் இரு தரப்பு மோதல்: 168 பேர் பலி; 98 பேர் காயம்

சூடானில் அரபு மொழி பேசுபவர்களுக்கும், அரபு அல்லாத பிற மொழி பேசுபவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் 168 பேர் உயிரிழந்தனர், 98 பேர் காயமடைந்தனர்.



சூடானில் 2003ஆம் ஆண்டுமுதல் டர்பர் மாகாணத்தை மையமாகக்கொண்டு உள்நாட்டுப் போர் இடம்பெற்றுவருகிறது. இந்நிலையில், டர்பரில் வசிக்கும் பழங்குடியினர்களில் அரபு மொழி பேசுபவர்கள் மற்றும் அரபு அல்லாத பிற மொழி பேசுபவர்கள் என இரு பிரிவுகளுக்கும் இடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது. இரு தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றிய நிலையில், பெரும் வன்முறையாக மாறியது.

இரு தரப்பைச் சேர்ந்தவர்களும் ஒருவரையொருவர் கூர்மையான ஆயுதங்கள்கொண்டு தாக்குதலில் ஈடுபட்டனர். இதில், வீடுகளும், கால்நடை பண்ணைகளும் சூறையாடப்பட்டன. கடந்த இரு நாட்களாக நடைபெற்ற மோதலில் இதுவரை 168 பேர் உயிரிழந்துள்ளதுடன், 98இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு சூடான் அரசு உயர்மட்ட அதிகாரிகளை அங்கு அனுப்பிவைத்துள்ளது.

# உலக செய்திகள்

## கோழி வளர்க்கும் தோனி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் தோனி, கடக்நாத் எனப்படும் கறுப்பு நிற கோழிகளை தன் பண்ணையில் வளர்க்கிறார்.

இதற்காக 2,000 கோழிகள் மத்திய பிரதேசத்திலிருந்து அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடக்நாத் எனப்படும் கறுப்பு நிற கோழிகள் மத்திய பிரதேசத்தில் ஜாபுவா உள்ளிட்ட சில மாவட்டங்களில் மட்டுமே வளர்கின்றன. புரதச்சத்து அதிகம் உள்ள இந்தக் கோழிகளுக்கு, புவிசார் குறியீட்டையும் மத்திய பிரதேசம் பெற்றுள்ளது.


பழங்குடியின மக்களால் வளர்க்கப்படும் இந்தக் கோழி, அம்மக்களின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாக உள்ளது. இந்தக் கோழிகளை வாங்கி வளர்ப்பதற்கு ஒன்லைன் வாயிலாக பதிவுசெய்யும் வசதியையும் அரசு செய்துள்ளது. ஜார்க்கண்டின் ராஞ்சியில் வசித்துவரும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் தோனி, 2,000 கோழிக் குஞ்சுகளுக்கு ஒன்லைன் வாயிலாக பதிவு செய்திருந்தார்.

அதன்படி, மத்திய பிரதேசத்தின் ஜாபுவா மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கம், 2,000 கோழிகளை தோனியின் ராஞ்சி பண்ணை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது. சாதாரண வகை கோழிகளைவிட இந்தக் கோழியின் இறைச்சி மற்றும் முட்டை விலை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## லெபனானில் கடத்தல்காரர்களென நினைத்து அகதிகள் படகு மீது மோதிய கடற்படைக் கப்பல்

### குழந்தை உட்பட 6 பேர் பலி: 47பேர் மீட்பு; பலர் மாயம்

லெபனானில் கடத்தல்காரர்களென நினைத்து அகதிகள் படகின் மீது கடற்படைக் கப்பல் மோதியதில் படகு கவிழ்ந்த விபத்தில் குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.



சிரியா, லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 60 பேரை ஏற்றிக்கொண்டு குறித்த அகதிகள் படகு ஐரோப்பிய நாடுகளைச் நோக்கிச் சென்றுள்ளது.

அவர்களை கடத்தல்காரர்களெனக் கருதிய லெபனான் கடற்படையினர் சுற்றிவளைக்க திட்டமிட்டு அகதிகள் படகின் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் அகதிகள் சென்ற படகு நிலைகுலைந்து கடலில் மூழ்கியது.

விபத்தில் அறுவர் உயிரிழந்துள்ளதுடன், 47 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மாயமானவர்களைத் தேடும் பணி நீடித்து வருகிறது.

### இன்று 62ஆவது நாளாகவும் தொடரும் தாக்குதல்

# உக்ரைனில் ஒரே இரவில் 423 இடங்களில் ரஷ்யா தாக்குதல்

உக்ரைனில் ஒரே இரவில் 423 இடங்களில் குண்டுமழை பொழிந்து பேரழிவை ஏற்படுத்தியுள்ள ரஷ்யா, உக்ரைனின் போர் விமானம், ஹெலிகொப்டர்கள், 9 ஆயுதக் கிடங்குகள் போன்றவற்றை அழித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி தொடங்கிய உக்ரைன் - ரஷ்யா போர், 2 மாதங்களைக் கடந்து இன்று 62ஆவது நாளை எட்டியுள்ளது. பலமிக்க இராணுவம், நவீன ஆயுதங்களைக் கொண்ட ரஷ்யா, உக்ரைனின் தலைநகர் கீவ் உட்பட பல முக்கிய நகரங்களை கைப்பற்றுவதில் தோல்வியடைந்தது. உக்ரைனின் பதிலடியால் பல இடங்களில் ரஷ்யப் படைகள் பின்வாங்கின. இந்தத் தோல்வியை ஈடுகட்டுவதற்காக தலைநகர் கீவ், அதன் புறநகர்ப் பகுதிகளான புச்சா, இதர நகரங்களில் அப்பாவி மக்களை ரஷ்ய வீரர்கள் கொடூரமாக சித்திரவதை, இனப்படுகொலை செய்து குழிதோண்டி புதைத்துள்ளனர்.

உக்ரைனிலுள்ள கெர்சனை தவிர, எந்த பகுதியையும் ரஷ்யா இதுவரை முழுமையாக கைப்பற்றவில்லை. மரியுபோலை கைப்பற்றியதாக ரஷ்யா அறிவித்தபோதிலும், அங்குள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய ஆலையான அசோவ்ஸ்டல் இரும்புத் தொழிற்சாலையை கைப்பற்ற தீவிர மோதல் இடம்பெற்று வருகிறது. இங்குள்ள பதுங்கி குழியில் 2,000 உக்ரைன் வீரர்கள், ரஷ்யப் படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

முதலில் இந்த தொழிற்சாலையை தரைமட்டமாக்க நினைத்த ரஷ்ய ஜனாதிபதி புட்டின், அங்கு அப்பாவி மக்களும் இருப்பதால் தனது முடிவை மாற்றிக்கொண்டார். "தொழிற்சாலையை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்துங்கள். இதில், ஒரு ஈ கூட தப்பக்கூடாது" என தனது படைக்கு உத்தரவிட்டார். இதனால், தொழிற்சாலையை சுற்றிவளைத்து ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஏற்கனவே, மரியுபோலில் ரஷ்யப் படைகள் 10,000 மக்களை கொன்று புதைகுழி தோண்டி புதைத்தது சமீபத்தில் வெளிச்சத்துக்கு வந்தது. இங்கு போர் முடிவுக்கு வந்தால், மேலும் பல பயங்கரங்கள் வெளிச்சத்திற்கு வரும் என கருதப்படுகிறது.

பல இடங்களில் ரஷ்யாவின் வான், தரைவழித் தாக்குதல்களை உக்ரைன் முறியடித்து வருகிறது. ரஷ்ய எல்லையில் உக்ரைன் குண்டு வீசியதில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்றும் ரஷ்ய எல்லைப் பகுதியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். அதேநேரத்தில், கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்ற, தனது தீவிர தாக்குதலை ரஷ்யா நேற்றும் தொடர்ந்தது. லுஹான்ஸ்கிலுள்ள போபாஸ்னா, சிவெரோடோனெட்ஸ்க், டொனெட்ஸ்கிலுள்ள குராக்கிவ், டான்பாசுக்கு மேற்கேயுள்ள டினிப்ரோ, தெற்கிலுள்ள ஒடெசா நகரங்களில் ரஷ்யப் படைகள் ஏவுகணை மற்றும் குண்டு வீசி நடத்திய தாக்குதலில் குழந்தை உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 2 பேர் காயமடைந்தனர்.






மேற்குலக நாடுகள் வழங்கிய ஆயுதங்களை கார்கீவ் பிராந்தியத்திலுள்ள 4 கிடங்குகள் உட்பட 9 கிடங்குகளில் உக்ரைன் அரசு சேமித்து வைத்திருந்தது. இந்தக் கிடங்குகளின் மீது ரஷ்ய இராணுவம் நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. பல இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 200 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், "உக்ரைனின் கார்கீவ் பகுதியிலுள்ள விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த உக்ரைனின் எஸ்யூ-25 போர் விமானம், மூன்று எம்ஐ-8 ஹெலிகொப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. 30இற்கும் மேற்பட்ட கவச மற்றும் பிற இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. வெடிமருந்து தொழிற்சாலை, பல பீரங்கி கிடங்குகள் என ஒரே இரவில் 423 உக்ரைன் இலக்குகள் தாக்கப்பட்டுள்ளன. ரஷ்யப் போர் விமானங்கள், 26 உக்ரைன் இராணுவ இலக்குகளை அழித்துள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போர் தொடங்கி 2 மாதம் நிறைவடைந்துள்ள நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆகியோர் உக்ரைன் தலைநகர் கீவ்வுக்கு சென்றுள்ளனர். அங்கு அவர்கள் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில், "நான் ஒரு முடிவை எதிர்பார்க்கிறேன். அது பரிசுகள் அல்லது சில வகையான கேக்குகள் அல்ல. குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் ஆயுதங்களை எதிர்ப்பார்க்கிறோம்" என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு ஸெலென்ஸ்கி அழைப்பு விடுத்திருந்த நிலையில், அமெரிக்காவின் இரு அமைச்சர்கள் கீவ் சென்றுள்ளமை உலகளவில் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது.

**2 மாதங்களாக பதுங்கு குழியில்தான்...**

மரியுபோலில் இரும்புத் தொழிற்சாலை பதுங்கி குழியிலுள்ள குழந்தைகள் மற்றும் பெண்கள், இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடும் ஒரு வீடியோ வெளியிடப்பட்டது. அதில், குழந்தைகளுக்கு இராணுவ வீரர்கள் இனிப்பு வழங்குகின்றனர். அப்போது பேசும் பெண்ணொருவர், 'பெப்ரவரி 27 அன்று வீட்டை விட்டு வெளியேறியதிலிருந்து தானும் தன் உறவினர்களும் வானத்தையோ... சூரியனையோ... பார்க்கவில்லை' என்று தெரிவித்துள்ளார்.

**ரஷ்ய இராணுவ முகாம் அழிப்பு 2 தளபதிகள் பலி**

ரஷ்யா கைப்பற்றிய கெர்சனிலுள்ள ரஷ்ய முகாமை உக்ரைன் அழித்துள்ளது. இங்கு நடத்தப்பட்ட தாக்குதலில் 2 ஜெனரல்கள் கொல்லப்பட்டனர். மற்றொருவர் படுகாயமடைந்தார். இதுவரை ரஷ்ய ஜெனரல்கள் 9 பேர் போரில் கொல்லப்பட்டுள்ளனர் என்று உக்ரைன் இராணுவப் புலனாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதை ரஷ்யா மறுக்கவில்லை. ஆனால், இந்த இடத்தில் 50 ரஷ்ய வீரர்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களின் நிலை என்ன என்று தெரியவில்லை. சிரியாவுக்கு இராணுவ வீரர்களை ஏற்றிச்செல்லும் ரஷ்யப் போர் விமானங்கள், பயணிகள் விமானங்கள், தனது நாட்டு வான்வெளியை பயன்படுத்த துருக்கி அரசு தடை விதித்துள்ளது.

**போரை நிறுத்துமாறு ஐ.நா. கோரிக்கை**

நான்கு நாட்களுக்கு போர் நிறுத்தம் மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சார்பில் அறிவுறுத்தப்பட்ட போதும், உக்ரைனின் டானட்ஸ்க் நகர் மீது ரஷ்யப் படைகள் பீரங்கி தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன.

ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள உக்ரைனில், ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு 4 நாட்களுக்கு போர் நிறுத்தம் அறிவித்து மனிதாபிமான வழித்தடங்களை திறந்து விடுமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இருந்தபோதும் டான்பஸ் பகுதியிலுள்ள வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களை கைப்பற்றும் முனைப்பில் ரஷ்ய இராணுவம் அங்கு தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. 8 ஆண்டுகளாக அங்கு உக்ரைன் இராணுவம் அமைத்துள்ள அரண்கள் மீது ரஷ்யப் படைகள், 1945ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஹவிட்சர் பிரங்கிகளால் தாக்குதல் நடத்தி வருகின்றன.

# ஐந்து தடவை சம்பியனுக்கு இப்படி ஒரு சோதனையா!

5 தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் தொடர்ச்சியாக 8ஆவது தோல்வியை சந்தித்து இதுவரையில் எந்தவொரு அணியும் சந்திக்காத சோதனையை சந்தித்துள்ளது.



ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும், கே.எல். ராகுல் தலைமையிலான லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியும் நேற்று முன்தினம் லீக் போட்டியில் மோதின. ஒரு வெற்றியைக் கூட பெறாத மும்பை அணி, லக்னோ அணியை வீழ்த்தியாவது வெற்றிக் கணக்கை தொடங்கலாம் என நினைத்து களமிறங்கியது.

தரமான கெப்டன் இன்னிங்ஸ் விளையாடிய ராகுல் சதமடித்து அசத்தினார். அவர் கடைசிவரை 103 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால், 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி 6 விக்கெட் இழப்புக்கு 168 ரன்கள் எடுத்தது. 169 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது. திலக் வர்மா தவிர, அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் சோபிக்க தவறியதால், மும்பை அணி 36 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

ஐ.பி.எல். வரலாற்றில் தொடர் 8 தோல்விகளை சந்தித்த முதல் அணி என்ற மோசமான சாதனைக்கும் மும்பை அணி சொந்த மானது.



# பார்சிலோனா பகிரங்க டெனிஸ் சம்பியனான கார்ஃபியா

பார்சிலோனா பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சம்பியன் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா, சகநாட்டு வீரரான பாப்லோ கேரினோ புஸ்டாவை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா, 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

# நம்பர் 1 வீரரை வீழ்த்தி சம்பியனான ரூப்லெவ்

உலக நம்பர் 1 வீரரான நோவக் ஜோகோவிச்சை தோற்கடித்து, தனது மூன்றாவது டூர்-லெவல் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார் ஆண்ட்ரே ரூப்லெவ்.

செர்பியன் ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியின் போது ஜோகோவிச்சிற்கு எதிராக கடுமையாக போராடிய ஆண்ட்ரே ரூப்லெவ், 6-2, 6-7(4), 6-0 என்ற செட் கணக்கில் தனது சிறப்பான ஆட்டத்தால் போட்டியை கைப்பற்றி அசத்தினார். 24 வயதான அவர் இரண்டாவது செட்டில் ஐந்து செட் புள்ளிகளைச் சேமித்து, டை-பிரேக்கை கட்டாயப்படுத்தினார்.

மேலும் ஜோகோவிச் போட்டியை சமன் செய்வதைத் தடுக்க முடியாமல் போனபோது, ரூப்லெவ் வெற்றிபெறுவதில் கடுமையாக தீவிரம் காட்டினார். இந்த போட்டி மொத்தம் இரண்டு மணி நேரம் 29 நிமிடங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# மாவட்ட அணியில் விளையாட காவத்தமுனை அல்–அமீன் வித்தியாலய மாணவன் தகுதி

(நிந்தவூர் நிருபர்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மட்ட 19 வயதுக்குட்பட்ட அணிக்கான தெரிவில் காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலய மாணவனும், ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக்கழக வீரருமான அப்னாஸ், மட்டக்களப்பு மாவட்ட 19 வயதுக்குட்பட்ட அணிக்கான தேர்வில் சிறப்பாக செயற்பட்டு மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# 10ஆவது முறை சம்பியனாகும் பேயர்ன் முனீச்

ஜெர்மனியின் பண்டெஸ்லிகா உதைபந்து தொடரில் பேயர்ன் முனீச் 10ஆவது முறையாக சம்பியனாகி சாதனை படைத்திருக்கிறது.

போருசியா டார்ட்மண்ட் அணியை வென்ற (3-1) பேயர்ன் முனீச், பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலிடத்தை உறுதி செய்துகொண்டது. நடப்பு சீசனில் இன்னும் 3 ஆட்டங்களே எஞ்சியிருக்கும் நிலையில், 2ஆம் இடத்திலிருக்கும் டார்ட்மண்ட் 12 புள்ளிகள் பின்தங்கியிருக்கிறது. இதனால் பேயர்ன் முனீச் பட்டத்தை வெல்வது உறுதியானது.

பேயர்ன் முனீச் தொடர்ந்து 10ஆவது முறையாக கிண்ணத்தை வெல்ல இருப்பது, ஐரோப்பிய சிறந்த 5 லீக் போட்டிகளில் சாதனையாகும். முன்னதாக 2012-20 காலகட்டத்தில் “சீரி-ஏ” போட்டியில் யுவென்டஸ் 9 முறை சம்பியனானதே சாதனையாக இருந்தது. பேயர்ன் முனீச் பயிற்சியாளர் ஜூலியன் நகேல்ஸ்மானுக்கு இது முதல் பட்டம்.






# கிண்ணியா அக்ஸேரியன் சுப்பர் லீக் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(சீனக்குடா நிருபர்)

2022ஆம் ஆண்டுக்கான கிண்ணியா அக்ஸேரியன் சுப்பர் லீக் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

இந்த உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி சம்பந்தமான தெளிவூட்டல் கூட்டம் அண்மையில் கிண்ணியா மிஷன் மண்டபத்தில் அக்ஸேரியன் லீக்கின் தலைவர் எம்.எம். ரசாத் முஹம்மத் தலைமையில் நடைபெற்றபோது அதன் ஸ்தாபகத் தலைவர் ஏ.எல்.ஏ. நபீல் இதனை தெரிவித்தார்.







ஜூன் மாதம் 1,2,3 ஆகிய திகதிகளில் சுற்றுப் போட்டி நடைபெற்று, 4ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இந்த சுற்றுப்போட்டியில் மொத்தம் 8 அணிகள் பங்குபற்றவுள்ளன.

அக்ஸேரியன் சுப்பர் போய்ஸ், அக்ஸேரியன் வொரியர்ஸ், அக்ஸேரியன் சுப்பர் பைட்டர்ஸ், அக்ஸேரியன் சுப்பர் கிங்ஸ், அக்ஸேரியன் ரேஸிங் ஸ்டார், அக்ஸேரியன் பிளக் பந்தர், அக்ஸேரியன் புலு ஈக்கில், அக்ஸேரியன் ஜூப்பிட்டர்ஸ் ஆகிய அணிகளே இந்த தொடரில் மோதவுள்ளன.

கடந்த 2017ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரியில் கல்வி கற்று விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த வீரர்களைக் கொண்டு இந்த சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. 8 அணித் தலைவர்களும் பங்குபற்றியிருந்த இந்த தெளிவூட்டல் கூட்டத்தின் போது, அணித்தலைவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டதோடு, 2022 ஆம் ஆண்டின் அக்ஸேரியன் சுப்பர் லீக்கின் உத்தியோக பூர்வ இலச்சினையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

# ஒலிம்பிக் தங்கம் வென்ற ரஷ்ய நீச்சல் வீரருக்குத் தடை!

ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பு கிட்டத்தட்ட இரு மாதங்களாக தொடரும் நிலையில், ஏற்கெனவே ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜூன் மாதம் 27ஆம் லண்டனில் ஆரம்பமாகும் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட பிரபல டென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடரில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ் நாட்டு வீரர்களுக்கு முன்னதாக தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது ரஷ்யாவை சேர்ந்த பிரபல நீச்சல் வீரர் எவ்கெனி ரைலோவுக்கு சர்வதேச நீச்சல் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் 2 தங்கம் வென்ற இவர், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு ஆதரவு தெரிவித்து அண்மையில் பேரணி ஒன்றில் பங்கேற்றார்.

இதனால் அடுத்த 9 மாதங்களுக்கு நீச்சல் போட்டிகளில் பங்கேற்க சர்வதேச நீச்சல் கூட்டமைப்பு தடைவிதித்துள்ளது. இதுகுறித்து பேசிய பினா அமைப்பு, ரைலோவை தொடர்ந்து பிற ரஷ்ய மற்றும் பெலாரஸ் வீரர்களை அனைத்து சர்வதேச போட்டிகளில் இருந்தும் தடை செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.



# சுய நினைவுக்கு திரும்பிய ஆஸி. கிரிக்கெட் வீரர்

மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரியான் கேம்பெல் சுய நினைவுக்கு திரும்பியுள்ளார். ஒரு வாரத்துக்கு முன்பு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. சிகிச்சையில் இருக்கும் அவர் சுயநினைவுக்கு திரும்பியுள்ளதாக கேம்பெல் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாரடைப்பு ஏற்பட்ட பிறகு அவர் ராயல்ஸ்டோக் பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனால், சுய நினைவுக்கு திரும்பியுள்ள அவர், இன்னும் சிகிச்சையில் இருக்க வேண்டியுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் கூறியுள்ளது. குடும்பத்தினர் கூறும்போது, கேம்பெல் சுயநினைவுக்கு திரும்பியது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளனர். பேசினாலும், சற்று பலவீனமாக இருப்பதாக தெரிவித்துள்ள அவர்கள், விரைவில் முழுமையாக குணமடைவார் என கூறியுள்ளனர்.

ரியான் கேம்பெல்லுக்கு 50 வயதாகிறது. கடந்தவாரம் குடும்பத்தினருடன் வெளியில் சென்றிருந்தபோது திடீரென நெஞ்சுவலியும், மூச்சுவிடுவதில் சிரமமும் ஏற்பட்டுள்ளது. சற்றும் தாமதிக்காத குடும்பத்தினர், உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர்.

12 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடிய அவர், மேற்கு அவுஸ்திரேலியாவுக்காக 98 முதல்தர போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதில் 11 சதங்களுடன் 6009 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவுஸ்திரேலியாவின் சர்வதேச அணிக்காக 2 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 54 ஓட்டங்களும், 3 டி20 போட்டிகளில் 26 ஓட்டங்களும் எடுத்தார். அவர் 2017 ஜனவரியில் நெதர்லாந்தின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

